விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 215 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 07 புதன்கிழமை (23.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

GTV Express Parcel.lk
மகாராஜா பொதிகள் சேவை
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
அவுஸ்திரேலியா Rs.1900/= இங்கிலாந்து Rs.1400/= ஜெர்மனி Rs.1900/=
(C-3490)
இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
www.gtve.com | 011 4 654 444

## செம்மணி மனிதப் புதைகுழியில் 80 மனித எலும்புக்கூடுகள் இதுவரை அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 80 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கையின் 15ஆம் பக்கம் பார்க்க

## குழந்தையின் பால் போச்சி செம்மணி புதைகுழியில் மீட்பு


(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் குழந்தையின் பால் போச்சி ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கையின் 2ஆம் கட்டத்தின் 17ஆவது நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது. 15ஆம் பக்கம் பார்க்க



## குழந்தைகள், சிறுவர்களது எலும்புக்கூட்டுடன்
# 8 மனித எச்சங்கள்
# நேற்று அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் 6 முதல் 7 வயது வரையான சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுடையது எனச் சந்தேகிக்கப்படும் 8 மனித எச்சங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன. (02ஆம் பக்கம் பார்க்க)




## புதிய கல்வி சீர்திருத்தம்
### 24ஆம் திகதி விவாதம்

(கொழும்பு)

உத்தேச புதிய கல்வி சீர் திருத்தம் குறித்த விவாதத்தை எதிர்வரும் 24ஆம் திகதி பாராளுமன்றத்தில் 15ஆம் பக்கம் பார்க்க

## 86 கைக்குண்டுகளுடன் வவுனியாவில் ஒருவர் கைது



15ஆம் பக்கம் பார்க்க

## தேசபந்து தென்னகோன் குற்றவாளி விசாரணைக் குழு அறிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்திய பாராளுமன்ற விசாரணைக் குழு, அவரை அனைத்து குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளியாக அறிவித்துள்ளது என சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்று பாராளுமன்றுக்கு அறிவித்தார்.

பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவியில் இருந்து 02ஆம் பக்கம் பார்க்க



## தலைமன்னார் கடற்பரப்பில் 4 இந்திய மீனவர்கள் கைதாகி விளக்கமறியலில்

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் 4 இந்திய மீனவர்கள் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை (21) இரவு தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் இந்திய இழுவைப் படகு 15ஆம் பக்கம் பார்க்க

## ஊளாய் மக்கள் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸாரின் அடாவடியான செயற்பாடுகளுக்கும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் நீதி 15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி
### நீர் சேகரிக்கும் வாகன பவனி



(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தும் வகையில் தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் நடப்படவுள்ள விடுதலை விருட்சத்திற்கான நீர் சேகரிக்கும் 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60 வது பிறந்தநாள் வாழ்த்துகள்



BEST WISHES

"மணிவிழா நாயகன்"

### திருவாளர் க.தெய்வராசா

ஈழ சிரோண்மணி
ஈன்ற தலை மாமணி
சீர்புகழ் செம்பணி
செந்தமிழ் சிவபணி

அன்னையே உயர்ந்து
ஆருயிரை பெற்றீரோ
மண்ணை மனையாள
மாதவமும் செய்தீரோ

கரவெட்டி ஊரதில்
காத்தருள் தேரதில்
யாக்கரு சித்தி விநா
யகரின் கழல் தொழு...

அன்பு அறம் ஒழுக்கம்
அவருடன் நெருக்கம்
இயல் இசை நாடகம்
இவற்றுடன் வணிகம்...

கணங்களின் அதிபதியாம்.
கணபதியின் பிள்ளையோ
யா...ரு...க்கது தெரியும்
யாக்கருவின் பிள்ளையா,

பண்கள் பதினாறும்
பாருலகில் பெற்றுயுர
அகமகிழ்ந்தேற்றும்

அன்புடன் வாழ்த்தும்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/பிரமந்தனாறு ம.வி

(C-3478)

## 8 மனித...

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டத்தின் 17 ஆவது நாள் அகழ்வு நேற்று யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ ஆனந்தராஜா கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் இடம்பெற்றது.

செம்மணிப் பகுதியில் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01" மற்றும் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன் போது இரண்டு மனிதப் புதைகுழிகளில் இருந்தும் சிறு குழந்தையினுடையது என சந்தேகிக்கப்படும் எலும்புக் கூட்டு தொகுதியுடன் 8 எலும்பு கூட்டு தொகுதிகள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை அடையாளம் காணப்பட்ட 07 மனித எலும்பு கூட்டு தொகுதிகள் மற்றும் நேற்று செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்ட 08 மனித எலும்பு கூட்டு தொகுதிகள் ஆகிய 15 எலும்பு கூட்டு தொகுதிகளும், அதனுடன் அடையாளம் காணப்பட்டுள்ள பால் போச்சியை ஒத்த போத்தல், ஆடையை ஒத்த துணிகள் என்பவற்றை இன்று புதன்கிழமை அகழ்ந்து எடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை செம்மணி மனித புதைகுழியில் அகழ்வுப் பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 26 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


அதன் போது, 65 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த இரு தினங்களில் 15 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ம-7,33)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிங்கள பாட ஆசிரியர்
திருமதி சுதாகரன் தயாபரி
அவர்களின் அன்பு மாமியார்

### கிருஷ்ணபிள்ளை பகவதி




தோற்றம் 1949.04.22
மறைவு 17.07.2025

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ மகாஜனக் கல்லூரி

(C-3479)

## மரண அறிவித்தல்



மலர்வு 1936.04.26
உதிர்வு 2025.07.19

### திருமதி இராசையா செல்லம்மா

வடமராட்சி அல்வாய் கிழக்கு ஒதியகலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா செல்லம்மா அவர்கள் 2025.07.19 (சனிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு இராசையாவின் பாசமிகு மனைவியும் அமரர்கள் தங்கம்மா, இரத்தினம், வேலாயுதம், மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபுண்ணியதேவா, சிவானந்ததேவா (நோர்வே), அமரர் சிவகிருஷ்ணபவான் (சுவிஸ்), பத்மயோகன், மனோரதி, சற்குணராணி (ஞானசம்பந்தர் கலைமன்ற முன்பள்ளி ஆசிரியை), தவலட்சுமிதேவி(Marketing officer LIC), மாலினி (ஆசிரியை-புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை), கிருஷ்ணானந்தமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாக்கியம், புனிதவதி(நோர்வே), கிருஷ்ணகுமாரி(சுவிஸ்), இளவதனி, சர்மிளா, முருகுப்பிள்ளை, அழகரத்தினம்(தபால் உத்தியோகத்தர்), இரவீந்திரன், சதீஸ்குமார்(அபிவிருத்தி உத்தியோகத்தர், காணி உரித்து நிருணய திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மோகனறாஜ், நிஜிதா(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் மாந்தை கிழக்கு), மதன்றாஜ்(பிரான்ஸ்), துஷ்யந்தினி (பிரான்ஸ்), சரண்றாஜ், ராஜ்மோகன், றஜிதா, அரவிந்தறாஜ்(பிரான்ஸ்), அருள்றாஜ், ரவிறாஜ், அர்ச்சனா, தினேஷ்(நோர்வே), பிரகாஷ்(நோர்வே), திலக்ஷன்(நோர்வே), மனோஜா(சுவிஸ்), யதுசன்(சுவிஸ்), ஜகன், அணோசிகா(HNDA மாணவி), அகிலினி(யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவி), மதுசாலினி, அபிராமி, சேந்தன், சாந்தன்(நோர்வே), நிந்துஜா (பட்டதாரி - பேராதனை பல்கலைக்கழகம்), அபிசாந்(மொறட்டுவ பல்கலைக்கழக மாணவன்), அபிநயா(சித்த மருத்துவம்), சசிந்(லண்டன்), அஸ்வினி, அருண்ஜா, சதுஷ்னா, கிருத்திகன், மனோஜ், ஹரிகரன், கிருஷானியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனிஸ்கா, ரியான் (பிரான்ஸ்), கர்ஷனா, அபிநாத் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை 2025.07.23 காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-3488)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சமத்துவமே அரசாங்கத்தின் நோக்கம்

## சோசலிச இளைஞர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

**அன்று ரயிலேறி வைராக்கியம், குரோதம், பிரிவினையை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்தனர். அதன்மூலம் யாழ். நூலகத்தை எரித்து நாசமாக்கினார்கள். இன்று நாம் ரயிலேறி சகோதரரத்துவத்தை கொண்டு வருகின்றோம். வடக்கையும், தெற்கையும் இணைக்கும் உறவு பாலத்தை ஏற்படுத்த வருகின்றோம் என சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசியக் குழு உறுப்பினர் மகேஷ் அம்பேபிட்டிய தெரிவித்தார்.**

சகோதரத்துவ தினம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு நேற்று யாழ். தேசிய மக்கள் சக்தி மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

'சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் 2008 ஆம் ஆண்டு முதல் சகோதரத்துவ தின நிகழ்வுகளை நடத்தி வருகின்றோம். சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்காக 17 ஆண்டுகளாக செயற்படுகின்றோம். இம்முறை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சகோதரத்துவ ரயில் பயணம் இடம்பெறவுள்ளது.


1981 மே 31 ஆம் திகதி யாழ்.வந்த ரயில் நிலையத்தில் குருணாகலை ரயில் நிலையத்தில் இருந்து அரசியல் குழுவொன்று ஏறியது. காமினி லொக்குகே, காமினி திஸாநாயக்க, காமினி ஜயவிக்கிரம, சிறில் மெத்திவ், கிறிஸ்டன் பெரேரா, ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் வைராக்கியம், குரோதம், பிரிவினையை எடுத்து வந்தனர். அவற்றை எடுத்து வந்துதான் ஆசியாவின் மிகப் பெரிய பொக்கிஷமான நூலகத்தை எரிந்தனர்.

எனவேதான் அந்த ரயிலில் சகோதரத்துவத்தை நாம் எடுத்துவருகின்றோம்.

1981 இல் ஆரம்பமான குரோதம் 1983 இல் கறுப்பு ஜூலையாக மாறியது. இறுதியில் பிரச்சினை போர்வரை வந்தது. இந்த கறுப்பு புள்ளி இன்னும் நீங்கவில்லை. ஆட்சியாளர்களும் அரசியலுக்காக மக்களை பிரித்தாளும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வடக்கையும், தெற்கையும் தமது அரசியலுக்காக அரசியல்வாதிகள் பிரித்தார்கள். தமது சுகபோக வாழ்வுக்காக மக்களை பிரித்தார்கள். அந்த யுகம் தற்போது முடிந்து விட்டது. புதிய நாடு உருவாகி வருகின்றது. புதிய யுகத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றோம். தேசிய சமத்துவமே அரசாங்கத்தின் நோக்கம். அதற்காக ஜனாதிபதியும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார் என அவர் தெரிவித்தார். (நி)

# எரிபொருளுக்கான வரியை நீக்க நடவடிக்கை



(கொழும்பு)

எரிபொருளுக்கு விதிக்கப்பட்ட 50 ரூபாய் வரியை நீக்க அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கும் என எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

எரிபொருளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி குறித்து எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி பாராளுமன்றில் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன் படி, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பழைய கடன்கள் முழுமையாக செலுத்தப்பட்டதும், எரிபொருள் லீற்றருக்கு விதிக்கப்பட்டுள்ள 50 ரூபா வரி நீக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்க ஆட்சியின் போது திறைசேரிக்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மொத்தமாக 884 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் அந்தக் கடனைத் தீர்க்கவே ஒரு லீற்றர் எரிபொருளுக்கு 50 ரூபா வரி அறிமுகப்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கடனின் அரைவாசி ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள தொகையும் செலுத்தப்பட்டதும் எரிபொருளுக்கான 50 ரூபா வரியை நீக்குவது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்யும் எனவும் அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# செம்மணி விவகாரம்; சர்வதேச விசாரணை அவசியம்

## அவுஸ்திரேலியாவில் தமிழர்கள் பேரணி

(கன்பெரா)


செம்மணி மற்றும் ஏனைய மனித புதைகுழிகள் குறித்து முழுமையான சர்வதேச விசாரணை அவசியம் என அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை தமிழர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேரணியின் போது இலங்கை தமிழர்கள் ஐநா மற்றும் வெளிநாடுகளின் தூதரகங்களிடம் இந்த கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தினால் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளமை செம்மணி மனித புதைகுழிகள் மூலம் மீண்டும் தெரியவந்துள்ளதை தொடர்ந்து அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை தமிழர்கள் இது குறித்த கவனத்தை ஈர்க்கும் விதத்தில் பேரணியொன்றை முன்னெடுத்தனர்.

அவுஸ்திரேலியாவிற்கான ஐநா தூதரகத்தின் முன்னாள் ஆரம்பமான பேரணி ஐநா அலுவலகங்களை நோக்கியும் பல தூதராங்களை நோக்கியும் சென்றது.

ஐநா அலுவலகத்திடமும் உலக நாடுகளின் தூதரங்களிடமும் தமிழர்கள் சர்வதேச சமூகத்தின் உறுதியான நடவடிக்கை மற்றும் நீதியைக்கோரும் மகஜர்களை கையளித்தனர்.




இலங்கையில் உள்ள செம்மணி மற்றும் ஏனைய மனித புதைகுழிகள் குறித்து முழுமையான சர்வதேச விசாரணையை ஆரம்பிக்க வேண்டும்.

செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வில் இலங்கை தொடர்பில் வலுவான தீர்மானமொன்றை நிறைவேற்ற வேண்டும்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்று அவுஸ்திரேலியாவும் இலங்கையில் இனப்படுகொலையில் ஈடுபட்ட இலங்கை இராணுவ அதிகாரிகளிற்கு எதிராக பயணத்தடைகளை விதிக்க வேண்டும்.

இனப்படுகொலையிலிருந்து உயிர்தப்பியவர்கள் மற்றும் முக்கிய சாட்சிகளிற்கு பாதுகாப்பு மற்றும் புகலிடத்தை வழங்க வேண்டும்.

இலங்கை இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்களை விடுவிப்பதற்கான அழுத்தங்களை கொடுக்க வேண்டும். நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான ஒடுக்குமுறை சட்டங்களை நீக்குவதற்கான அழுத்தங்களை கொடுக்க வேண்டும்.

தமிழர்கள் இனப்படுகொலைக்குள்ளானார்கள் என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் போன்ற வேண்டுகோள்களை பேரணியில் கலந்துகொண்டவர்கள் முன்வைத்துள்ளனர். (நி)

SLIC Sri Lanka Insurance LIFE

# 'சுப பெத்தும்' விருது வழங்கும் நிகழ்வு

இலங்கை ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் சுபபெத்தும் உதவித்தொகை விருது வழங்கும் விழா இன்று கொழும்பு பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர் தரப் பரீட்சைகளில் சிறந்து விளங்கியதற்காக நாடு முழுவதிலிருமிருந்து 225 சிறந்த மாணவர்கள் இதில் கலந்து கொள்வர்.

இலங்கை காப்பீட்டு ஆயுள் நிறுவனத்தால் தொடங்கப்பட்ட சுபபெத்தும் உதவித்தொகை திட்டம், நாட்டின் பிரகாசமான இளம் மனங்களை ஆதரிப்பதன் மூலம் இலங்கையின் எதிர்காலத்தை மேம்படுத்தும் அதன் நோக்கத்தைத் தொடர்கிறது.

இன்றுவரை இந்த முயற்சி 2000 இற்கும் மேற்பட்ட உதவித்தொகைகளை வழங்கியுள்ளது. இதில் ரூ.220 மில்லியனுக்கும் அதிகமான நிதி உதவித்தொகைகளும் அடங்கியுள்ளன. (நி)

# 10 பேரில் ஒருவர் சிறுநீரக நோயால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வயதுக்கு வந்த 10 பேரில் ஒருவர் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுவதாக இலங்கை மருத்துவச் சங்கம் தெரிவித்துள்ளது.

நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவை சிறுநீரக நோய்க்கான முதன்மையான காரணங்கள் என்று சங்கத்தின் நிதிச்செயலாளரான உதான ரத்னபால தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணமட்ட டெனிஸ் போட்டியில் உரும்பிராய் இந்துவிற்கு சம்பியன்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட டெனிஸ் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரி பெண்கள் அணியினர் சம்பியன் மற்றும் இரண்டாம் இடங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

வடமாகாணபாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட பெண்களுக்கான டெனிஸ் போட்டிகள் அண்மையில் யா/சென் ஜோன்ஸ் கல்லூரியிலும், சுண்டுக்குழி மகளிர் கல்லூரியிலும் நடைபெற்றது.

இதில் உரும்பிராய் இந்துக் கல்லூரியானது 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் சம்பியன் கிண்ணத்தையும், 17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். இதில் சிறந்த வீராங்கனையாக உரும்பிராய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த த.கஸ்தூரி தெரிவு செய்யப்பட்டார். (3)

# மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்த வவுனியா வீரர்



வடமாகாண மட்ட விளையாட்டு பெருவிழாவின் போது 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் 4 நிமிடம் 10.09 செக்கன் நேரத்தில் ஓடி முடித்து பழைய சாதனையினை முறியடித்து புதிய சாதனையினை வவுனியா மாவட்ட வீரரான சசிகுமார் டனுசன் தம் வசமாக்கியுள்ளார்.

வடமாகாணத்தில் கடந்த 2007 ஆம் ஆண்டு என்.சிவநேசனால் 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் 4 நிமிடம் 12.07 செக்கன் நேரத்தில் ஓடி முடித்த சாதனையினை 18 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட வீரரான சசிகுமார் டனுசன் தம்வசமாக்கியுள்ளார்.

மேலும் கடந்த 2024 ஆம் ஆண்டு இடம்பெற்ற வடமாகாண மட்ட விளையாட்டு பெருவிழாவின் போது 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் 1 நிமிடம் 59.03 செக்கன் நேரத்தில் ஓடி முடித்து 11 வருட சாதனையினை சமன் செய்த அவர் இம்முறை 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1 நிமிடம் 58.07 செக்கன் நேரத்தில் ஓடி முடித்து தன்னால் நிலை நாட்டப்பட்ட சாதனையினை முறியடித்து புதிய சாதனையினை நிலை நிறுத்தியுள்ளார்.

வடமாகாண மாகாண விளையாட்டு பெருவிழாவானது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன் தினம் இடம்பெற்றிருந்தது.

இந் நிகழ்வின் போதே வவுனியா வீரர் சசிகுமார் டனுசன் இச்சாதனைகளை நிலை நாட்டியுள்ளார். (3)

# INVITATION FOR BID 2025/09
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via PSDG & Maintenance
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Document
5. Interested bidders may obtain further information **from address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-07-23 To 2025-08-06** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T. P:021-205-8865, e-mail: pmdveps@gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-07-23 To 2025-08-06 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-07-30 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 3.00 P.M on 2025-08-07 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft / Security Deposit: Security Amount (Rs.) | Required Bid Security/ Bank Draft / Security Deposit: Validity Period | Bid Validity Period (Days) |
| PSDG/NP/JAF/VEPS/ 2025/OS/02 | Improvement of public library and sub office building at Kopay | 1.19 | 49 | C9 or above (Building) | 1,000.00 | 12,000.00 | 23.10.2025 | 49 |
| MA/NP/JAF/VEPS/ 2025/ LAR/02 | Renovation of New Chemmani Road (Balance work) at Irupalai south | 0.75 | 49 | C9 or above (High way) | 1,000.00 | 8,000.00 | 23.10.2025 | 49 |

**Chairman**
**Divisional Procurement Committee,**
Valikamam East Pradeshiya Sabha,
Puttur

(C-3483) (23.07.2025)

## அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 22 • 01 • 1953

உதிர்வு 25 • 06 • 2025

கடந்த 25.06.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் செல்லத்தம்பி ரவீந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23.07.2025) புதன் கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று, வீட்டுக் கிருத்திய கிரியைகள் (25.07.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல், மின்னஞ்சல் மூலமாகவும் எமக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர் வளையங்கள், மலர் மாலை சாத்தியவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் ஆறுதலாகவும் உதவியாகவும் இருந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (4873)


புது வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.

இங்ஙனம்: குடும்பத்தினர் 076 697 2572

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி மறுசீரமைப்பு; இன்னமும் இறுதி செய்யப்படவில்லை

## அமைச்சர் நளிந்த அறிவிப்பு



(கொழும்பு)

கல்வி மறுசீரமைப்பு யோசனை இன்னும், இறுதி செய்யப்படவில்லை எனவும் இது குறித்து யோசனை மற்றும் ஆலோசனை முன்வைக்க விரும்புவோருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, அவர் இதனை குறிப்பிட்டார்.

நாட்டின் வரலாற்றை பாதுகாக்கும் நோக்கிலேயே தொல்பொருள் சட்டங்கள் திருத்தப்படுகின்றன.

அதேபோல கல்வி மறுசீரமைப்பு என்பது பல காலமாக கலந்துரையாடப்பட்டு வந்ததொரு விடயம் என்பதுடன் அது தற்போதைய அரசாங்கம் புதிதாக கொண்டு வந்ததொரு விடயமல்ல.

எனவே, கல்வியியலாளர்கள் முதல் சாதாரண மக்கள் வரை கல்வித் துறையில் விரிவானதொரு மறுசீரமைப்பு தேவை என வலியுறுத்துகின்றனர்.

அதற்காக, தேசிய கல்வி நிறுவகம் பல காலமாக செயற்பட்டுவரும் நிலையில், இந்த விடயத்துடன் தொடர்புடைய உள்ளூர் நிபுணர்களுடன் கலந்துரையாடியதுடன் வெளிநாடுகளின் அனுபவங்களையும் பெற்றுள்ளது.

இந்தநிலையில், தற்போது கல்வியமைச்சினால் சில யோசனை திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இது குறித்த பேச்சுவார்த்தைகள் இன்னும் நிறைவடையவில்லை.

எனவே, கல்வித்துறையுடன் தொடர்புடையவர்களுக்கு தங்களது கருத்துகளை முன்வைப்பதற்கு கால அவகாசம் உள்ளது.

அனைத்து தரப்பினராலும் முன்வைக்கப்படும் கருத்துகள் மற்றும் யோசனைகளை கருத்திற்கொண்டே கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும்.

சிலர் தங்களது அரசியலுக்காக போலியான விமர்சனங்களை தற்போது முன்வைத்து வருகின்றனர்.கல்வி மறுசீரமைப்பு குறித்து பாராளுமன்ற விவாதத்துக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் எனவும் அதன் போது கருத்துகளை பகிரமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் பிரகாரம் அனைவருக்கும் கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

எனினும், அனைவராலும் முன்வைக்கப்படும் சகல யோசனைகளையும் செயற்படுத்த முடியாது என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (நி)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-11 காரைதீவு வீதி, ஆதன இல 281 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

செபஸ்ரியாம்பிள்ளை பிரான்ஸிஸ்கம்மா 30.04.2024 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அன்ரனிப்பிள்ளை முகதாவில் 2230 ஆம் இலக்க பிரகடன உறுதியில், குறித்த எனது ஆதனத்தின் உறுதிகள் அண்மைக்கால இடம்பெயர்வின் போது தவறிவிட்டன அவற்றை இதுவரை எங்கு தேடியும் கிடைக்கவில்லை எனவும், எனது நீண்டகால ஆட்சியுமானதும், என உறுதிப்படுத்தி பிரகடனப் படுத்துகிறேன்.

குறித்த ஆதனத்தை யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மாவும் 30.12.2012 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 1612 ஆம் இலக்க நிபந்தனை அறுதி மூலம் கிறிஸ்ரியன் சிலுவைதாஸன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை கிறிஸ்ரியன் சிலுவைதாசனும் பெண் சிசலியம்மாவும் 14.12.2013 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 1937 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மா என்பவருக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை, யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/85 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் "சுரிவெளிக்காடு" நிலப்பரப்பு 03 குளி 16.12 (நிலப்பரப்பு மூன்று குளி பதினாறு தசம் ஒன்று இரண்டு) உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.புஸ்பராஜா அவர்களால் 23.01.2004 ஆம் திகதி அளந்து விபரித்த 2272 ஆம் இலக்க படத்தின்படி துண்டு-2

இதற்கு எல்லைகள்:-
கிழக்கு: காரைநகர் வீதி.
வடக்கு: அமலதாஸ் யூடிதமெலானின் ஆதனம்.
மேற்கு: கடற்கரை வீதி.
தெற்கு: அரசாங்க காணி.
இதடங்கலும்:

தற்போது இவ்வாதனத்தை யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்ஸிஸ்கம்மா உம் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்ஸிஸ்கம்மா உம் என்பவர் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

(சி-3476)

**ஆணையாளர்,மாநகர சபை,யாழ்ப்பாணம்.**

# மனுஷவின் செயலாளர் கைது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தனிப்பட்ட செயலாளர் ஷான் யஹம்பத் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஷான் யஹம்பத் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# இராசிபலன்

23.07.2025
ஆடி 07, புதன்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 3.11 மணிவரை

திருவாதிரை முன்னிரவு 6.58 மணிவரை
சுப நேரம் 04.32 - 06.02 மணிவரை
இராகுகாலம்12.02-1.32 மணிவரை

சந்திராஷ்டமம்
அனுசம், கேட்டை

**வளவன்**





ஆதாயம்தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிராத்திப்பீர்கள்.




பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைகளைத் தகர்த்து தன் விறைவு காணும் நாள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.




கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உடல் நலன் சீராகும்.




தொழில் நலன் கருதிய திட்டங்கள் கைகூடும், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், ஆனந்தமான நாள்.




குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கௌரவக் குறைவான நாள்.




பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்கும் வாய்ப்புண்டு.




எப்படி நடக்குமோ என நினைத்த காரியங்கள் நல்ல படியாக நடைபெறும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், நிலையான வருமானத்திற்கும் வழி பிறக்கும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்த வேலையும் இழிவு அல்ல. இழிவு என்பது சோம்பலே.**

# ‘நட்புறவுப் பாலம்’ என்ற பெயரில் சதி!

# எதிர்ப்பை வெளிக்காட்டுங்கள்

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு



**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணத்தில் “நட்புறவுப் பாலம்” என்ற பெயரில் அரசு ஒரு பாரிய சதித்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும், எனவே அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இன்றைய தினம் கறுப்புக் கொடி கட்டி தமிழ் மக்கள் தங்கள் எதிர்ப்பையும் துக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.**

கொக்குவிலில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

“ஜுலை 23 என்பது தமிழ் மக்களுக்கு கறை படிந்த ஒரு நாள். 1983ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பாரிய இனப் படுகொலையை மறைப்பதற்கும், அதன் வரலாற்றை மழுங்கடிப்பதற்கும் அநுர அரசு ஒரு சதித்திட்டத்தை மிகச் சாதுர்யமாக முன்னெடுக்க முயல்கிறது.

இதற்காக, தென்னிலங்கையில் இருந்து ஒரு தொகுதி நபர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து, அரசின் ஆதரவாளர்களைப் பயன்படுத்தி, மக்களை ஏமாற்றி, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்குவதாகக் கூறி “நட்புறவுப் பாலம்” என்ற நிகழ்வை நடத்த திட்டமிடுகிறது.

எனவே தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். தென்னிலங்கையிலிருந்து வரவுள்ளவர்களுடன் இணைந்து அரசின் ஆதரவாளர்களின் இந்த முயற்சியில் தமிழ் மக்கள் பங்கேற்கக் கூடாது. அந்த நாளை ஒரு கறை படிந்த நாளாகக் கருதி, கறுப்புக் கொடி கட்டி எமது துக்கத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்துவோம் என தெரிவித்தார். (8-33)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கணித, விஞ்ஞான பயிற்சி பெறும் ஆசிரியர்களின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கற்பித்தல் உபகரண கண்காட்சி இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் கலந்து கொள்ளவுள்ளார். (3-33)

# வரலட்சுமி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வட கிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் வரலட்சுமி விரத பூஜைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று மஹாலட்சுமி அம்மனின் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நோன்பு காப்பு வழங்கப்படும். நோன்பு காப்பு எடுக்கும் அடியவர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக பெயர், நட்சத்திரங்களைப் பதிவு செய்து கொள்ள முடியுமென ஆலய ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (3)

# உலக வங்கி பொருளாதார நிபுணர் குழு யாழ். பழைய கச்சேரிக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

மரபுச் சுற்றுலா மேம்பாடு மற்றும் தொடர்ச்சியாக பேணுதல் என்ற அடிப்படையில் பழைய கச்சேரியினை புனரமைப்பு செய்தல் தொடர்பாக அரசாங்க அதிபருடன் உலக வங்கி பொருளாதார நிபுணர் குழுவினர் நேற்று முன்தினம் பழைய கச்சேரியினை பார்வையிட்டு ஆராய்ந்தனர்.

இதற்கு முன்னராக மாவட்ட செயலகத்தில் 26.05.2025 ஆம் திகதி உலக வங்கி குழுவினருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் சுற்றுலாத் துறை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பழைய கச்சேரி மற்றும் யாழ்ப்பாண கோட்டை புனரமைப்பின் அவசியம் தொடர்பாக - உலக வங்கிக்குழுவினரிடம் அரசாங்க அதிபரால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது.

மேலும், வடக்கு-கிழக்கு மாகாணங்களின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் உட்கட்டுமானம் மற்றும் சுற்றுலாத் துறையினை விருத்தி செய்தல் தொடர்பிலான ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைவாக, கடந்த இரு மாதங்களாக வடக்கின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் செயற்றிட்டங்களையும் அதன் சாத்திய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (8)

# அன்னையர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் நம்பாலை கிராமத்தின் ஐயனார் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த வைத்தியர்களை உருவாக்கிய அன்னையர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த வகையில் திருமதி. போ. புஷ்பவதி, திருமதி. த.பராசக்தி, திருமதி. இ.அன்னலட்சுமி, திருமதி. ப.லோகேஸ்வரி, திருமதி. த.பரமேஸ்வரி, திருமதி. சி.கலாராணி, அமரர் செல்வமலர், திருமதி. கு. மங்களேஸ்வரி, திருமதி. சி.யோகமலர், திருமதி. மு. விஜயலட்சுமி,திருமதி. ப.யோகராணி, திருமதி. ந.சற்குணேஸ்வரி ஆகிய அன்னையர்களே கௌரவிக்கப்படவுள்ளனர். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 500 | 280 | 300 |
| தக்காளி | 200 | 200 | 200 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 350 | 300 | 300 | 350 | 280 |
| கோவா | 300 | 400 | 450 | 250 | 400 |
| கரட் | 400 | 450 | 450 | 350 | 600 |
| பூசணி | 100 | 120 | 120 | 120 | 150 |
| புடோல் | 100 | 100 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 300 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 650 | 800 |
| வெண்டக்காய் | 150 | 120 | 150 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 800 | 700 | 700 | 600 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 230 | 300 |
| பீற்றூட் | 200 | 150 | 250 | 120 | 200 |
| கறிமிளகாய் | 600 | 650 | 500 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 500 | 300 | 400 |
| போஞ்சி | 600 | 650 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | 250 | -- | 250 |
| கீரை – 1 பிடி | 100 | 50-120 | 100 | 60 | 120 |
| தேசிக்காய் | 250 | 200 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 80-140 | 140-180 |
| இராசவள்ளி | 800 | 650 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 250 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | -- | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் நல்லூர் திருவிழாக் காலத்தை பேணுங்கள்

## கலாநிதி ஆறு திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் நல்லூர் திருவிழாக் காலத்தை பேணுமாறும் புனிதமான திருவீதியில் எவரும் மறந்தும் பாதணிகளை அணிந்து செல்லாமல், புனிதத்தைப் பேணுமாறும் கலாநிதி ஆறுதிருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


நல்லூர் திருவிழாக் காலம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நல்லூரானின் பெருந்திருவிழாவை முன்னிட்டு நாம் ஆயத்தமாவோம்.

ஈழத்திருநாட்டின் ஈடு இணையற்ற பெருங்கோவிலாக விளங்குவது நல்லூர்க் கந்தசுவாமி கோவில். இத்திருக்கோவிலின் வருடாந்த பெருந்திருவிழா இம்மாதம் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெறவுள்ளது.

திசைகள் தோறும் கோபுரங்கள் உள்வீதி முழுவதும் உவமை இல்லா அழகுக் காட்சிகள் உருவாக்கி உலகம் வியக்க வைக்கும் நல்லூரான் தனித்துவத்தை எவரும் குறைத்து மதித்து விடமுடியாது.



சர்வதேசமே நல்லூர்ச் சிறப்பை வியந்து போற்றுகிறது. அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம் வெளியிட்டு வரும் நூலில் உலகம் முழுவதும் வாழும் சைவ மக்கள் சீரிய ஒழுங்கைப் பின்பற்றுவதற்கு நல்லூரை தரிசியுங்கள் என கூறியுள்ளார்கள்.

இந்திய மத்திய அரசின் நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் "அப்பப்பா என்ன அதிசயம்? நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குள் கால் எடுத்து வைத்தவுடன் எம்மை மறந்து விடுகிறோம். ரம்மியமான இத்திருக்கோவில் சிறப்புப் பற்றி உலகமே வியக்கிறது" என உரைத்தமை அனைவரும் அறிவர்.

அன்பர்களே நல்லூர்ப் பெருந்திருவிழாக் காலங்களில் குடும்பம் குடும்பமாக சென்று வழிபாடு செய்வதற்கு ஆயத்தமாகுங்கள். தமிழர் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் வழிபாட்டுக் காலத்தை பேணுங்கள். புனிதமான திருவீதியில் எவரும் மறந்தும் பாதணிகளை அணியாதீர்கள். விசேட தேவையுடையவர்கள் வழிபாடு செய்ய வரும்போது தொண்டர்கள் உதவுங்கள். சுற்றுச்சூழலில் வசிப்பவர்கள் ஆன்மிக அலங்காரங்களை தாம் வசிக்கும் இடங்களில் ஏற்படுத்துங்கள். படம்பிடித்து முருகனை தேடுவதை விட பக்தியோடு அவனை அகத்தால் உள்வாங்குங்கள். வீதியில் சுவாமி புறப்பட்டால் வேடிக்கைக்கு இடமில்லை. வேலனிடம் விடிவு கேட்டுப் பிரார்த்திப்பதே எமக்கு வேலை என உணருங்கள்.

சஞ்சலமின்றி இறைவன் எமக்குத் தந்த இந்த இனிய நாட்களை ஆனந்தமாகக் கழிப்பதற்கு ஆயத்தமாகுங்கள். அலங்காரக் கந்தனை தரிசிக்க வரும் அடியவர்களாகிய நாம் எளிமையாக நின்று வணங்குவோம்.

எமது அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக வழிபாட்டு மரபை முன்னெடுத்துச் செல்வோம். எல்லோரும் நல்லூரான் பெருவிழாவைக் கண்ணாரக் காண்போம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (8)

# வழங்கு! வழங்கு! வயல் காணியை வழங்கு!

# வவுனியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

**(வவுனியா) ..................... வயல்காணி தருவதாக கூறியே குடியேற்றம் செய்தனர். ஆனால் தற்போது வரை எங்களுக்கு காணி வழங்கப்படவில்லை என தெரிவித்து வவுனியா, செட்டிக்குளம் கமநல சேவை நிலையத்திற்கு முன்பாக மெனிக்பாம் மக்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.**



குறித்த ஆர்ப்பாட்டமானது தமக்கு அருவித் தோட்டம் பகுதியில் வழங்குவதாக கூறிய ஒரு ஏக்கர் விவசாய காணியினை வழங்க வேண்டும் என தெரிவித்தே முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது ஆர்ப்பாட்டக் காரர்கள் வழங்கு! வழங்கு! வயல் காணியை வழங்கு! "அரச அதிகாரிகளே ஏழைகளின் ஒரு வேளை உணவை நிம்மதியாக உண்ணவிடு. மெனிக்பாமில் வசிக்கும் மக்களுக்கு வயல் காணி ஒரு ஏக்கர் வீதம் வழங்கு" போன்ற பதாகைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், எங்களை 2004 ஆம் ஆண்டு சிதம்பரபுரம் முகாமில் இருந்து மெனிக்பாமிற்கு அரை ஏக்கர் மேட்டுக்காணி மற்றும் 1 ஏக்கர் வயல் காணி தருவதாக தெரிவித்து குடியேற்றம் செய்தனர். ஆனால் தற்போது வரை எங்களிற்கு 1 ஏக்கர் வயல் காணி தரப்படவில்லை.

மேலும் கூலி வேலையினை மேற்கொண்டே எமது வாழ்வாதாரம் போகின்றது. அத்தோடு கடந்த காலத்தில் கிராம சேவையாளர் இடம் சென்றும் வயல் காணி தொடர்பாக நாங்கள் பதிவு செய்திருந்தோம்.

அதன் மூலமாக ஒரு சிலருக்கு வழங்கப்பட்டது. ஆனால் 20 வருடமாகியும் எங்களிற்கு கிடைக்கவில்லை. அத்தோடு அருவித்தோட்டம் கமக்கார அமைப்பை சேர்ந்தவர்கள் பல ஏக்கரில் வயல் காணிகளை பெற்று வயல் செய்கின்றனர். ஆனால் எங்களிற்கு எந்த வயற் காணிகளும் கிடைக்க வில்லை. எனவே எங்களிற்கு தருவதாக தெரிவித்த வயற்காணியினை தரவேண்டும் என தெரிவித்தனர்.

இதன்போது சம்பவ இடத்திற்கு வருகை தந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குறித்த காணியினை பெற்றுத் தருவதற்கான தீர்மானத்தினை மேற்கொள்வதாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வாக்குறுதி வழங்கியதன் அடிப்படையில் குறித்த ஆர்ப்பாட்டமானது கைவிடப்பட்டிருந்தது. (8-250)

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த தொலைபேசி இலக்கம் அறிமுகம்

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடு குளத்தின் கீழ் வரும் பிரதான ஆறான நெத்திலி ஆறு பகுதியில் அண்மைக்காலமாக பெறுமதிமிக்க பல வகை மரங்களை சட்ட விரோதமான முறையில் இரவு வேளைகளில் எந்தவித அனுமதியும் இன்றி மரங்கள் அழிக்கப்பட்டு கொள்ளை யிடப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் அப்பகுதியில் உள்ள ஆற்றிலும் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வு இடம் பெற்று வருவதுடன் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களிலும் பல அடிதாளத்தில் மணல் அகழ்வும் இடம் பெறுகின்றன.

இது தொடர்பில் அப்பகுதியில் வாழும் விவசாயிகள் கிராம அலுவலருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக நேற்றைய தினம் தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம் திஸ்ஸா நாயக்க, கிராம அலுவலர் கிராம பொது அமைப்புக்கள், கண்டாவளை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து நெத்தலியாறு பகுதியில் இடம்பெறும் சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இது போன்ற செயற்பாடுகள் இனி வரும் காலங்களில் இடம் பெறாது இருப்பதற்கு 071 859 2122 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக எந்த வேளையிலும் தம்மை தொடர்பு கொண்டு எந்தவித குற்ற செயல்கள் இடம்பெற்றாலும் உடன் தெரிவிப்பதன் மூலம் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் இரவு வேளைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (8-360)

# சகோதரத்துவத்திற்கான பயணம்

(யாழ்ப்பாணம்)

சகோதரத்துவ தினத்தினை முன்னிட்டு இன்று புதன் கிழமை சோஷலிசம் இளைஞர் சங்கம் யாழ் தேவி புகையிரதத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர். கொழும்பு கோட்டை புகை யிரத நிலையத்திலிருந்து இன்று காலை 06.40 மணிக்கு பயணம் ஆரம்பமாகி, பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணத்தை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த பயணத்தில் குருநாகல் புகையிரத நிலையத்தில் நூல்கள், வழங்கும் நிகழ்வு இடம்பெறும். அதுபோன்று அநுராதபுர புகையிரத நிலையத்திலும் நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


புகையிரதம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததும், யாழ்ப்பாண புகையிரத நிலைய நூலகத்திற்கு நூல்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாண புகையிரத நிலையத்தில் இருந்து ரிம்பர் மண்டபம் நோக்கி நடைபயணம் மேற்கொள்ளப்படும். அங்கு கலாசார நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நாளை வியாழக்கிழமை எழுவைதீவுக்கு பயணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு 200 பனங்கன்று நடுகை செய்யப்படவுள்ளதுடன், எழுவைதீவு பாடசாலைக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள், மற்றும் தீவின் இளைஞர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கும்நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (8-3[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஒபாமாவை சிறையில் அடைப்பது போன்று வீடியோ வெளியிட்ட ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவை கைது செய்து, சிறையில் அடைப்பது போன்ற ஏ.ஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட வீடியோவை, தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ளார்.

"யாரும் சட்டத்துக்கு மேலானவர்கள் கிடையாது" என ஆரம்பிக்கும்படி அந்த வீடியோ உள்ளது. அதில், முன்னாள் ஜனாதிபதிகளான பராக் ஒபாமா, ஜோ பைடன் உள்ளிட்ட பலரும் இந்த வாசகத்தை கூறுகின்றனர்.

இதைப் பார்த்து ஜனாதிபதி ட்ரம்ப் சிரிப்பது போலவும், பின்னர் கைதிகளுக்கான ஆரஞ்சு நிற உடையில் ஒபாமா சிறையில் இருப்பது போன்றும் வீடியோ உருவாக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட இந்த வீடியோவை, ட்ரம்ப் தன் சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

ஒபாமாவை, மிகப் பெரிய தேர்தல் மோசடிக்காரர் என ட்ரம்ப் கடந்த வாரம் விமர்சித்து இருந்தார்.

மேலும், 2016 தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெறுவதை தடுக்க, ஒபாமா மோசடி வழிகளை கையாண்டதாக அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குநர் துளசி கபார்ட் புகார் கூறியிருந்தார்.

ஒபாமா தன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, அரசியலுக்காக உளவுத்துறையை பயன்படுத்தியதாகவும் அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்கான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளதாகவும், ஒபாமாவிடம் விசாரணை நடத்த வேண்டும் என்றும் துளசி கபார்ட் கூறியிருந்தார்.

இதன் தொடர்ச்சியாகவே பராக் ஒபாமாவை கைது செய்வது போன்ற ஏ.ஐ வீடியோவை டொனால்ட் ட்ரம்ப் பகிர்ந்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள பலர், ட்ரம்ப் பொறுப்பில்லாதவர் என விமர்சித்து வருகின்றனர். (நி)

## பொருளாதார ரீதியில் சக்திவாய்ந்த நாடுகளின் பட்டியல் வெளியீடு




2025ஆம் ஆண்டின் உலகின் மிகவும் சக்திவாய்ந்த 20 நாடுகளின் தரவரிசைப் பட்டியலை Forbes எனப்படும் பிரபல சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

உலகின் சக்திவாய்ந்த நாடுகளுக்கான போட்டி பொருளாதார வலிமை, மக்கள் தொகை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது.

அந்தவகையில் 1 ஆவது இடத்தில் அமெரிக்காவும், 2 ஆவது இடத்தில் சீனாவும், 3 ஆவது இடத்தில் ஜேர்மனியும், 4 ஆவது இடத்தில் இந்தியாவும், 5 ஆவது இடத்தில் ஜப்பானும், 6 ஆவது இடத்தில் பிரித்தானியாவும், 7 ஆவது இடத்தில் பிரான்ஸும், 8 ஆவது இடத்தில் இத்தாலியும், 9 ஆவது இடத்தில் கனடாவும், 10 ஆவது இடத்தில் பிரேஸிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


## பங்களாதேஷ் விமானம் வி

❖ 27 பேர் உயி

❖ 70 பேர் படுக

(டாக்கா) ●●●●●●●●●●●

பங்களாதேஷ் த டாக்காவில் பாடசாலை ஒன் விமானப்படை பயிற்சி ஜெட் விழுந்து விபத்துக்குள்ளா பேர் உயிரிழந்துள்ளதோடு காயமடைந்துள்ளனர்.



## பள்ளத்தில் பாய்ந்த பேருந்து!

✹ 13 பேர் உயிரிழப்பு

✹ 20 பேர் காயம்

✹ ரஷ்யாவில் துயரம்

(ட
ர
பகுதி
தொ
பேரு
கட்டு
ஆழ
விழு
பேர்
காய
கப்ப

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## வெளிநாடு

# ...ஷில் பாடசாலை மீது ...விழுந்து விபத்து!

## ...பிரிழப்பு ...காயம்

தலைநகர் ...ஒன்றின் மீது ...ஜட் விமானம் ...ானதில் 27 ...டு, 70 பேர்






தலைநகர் டாக்காவின் வட பகுதியிலுள்ள உத்தராவின் டயபாரி பகுதியில் இருந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை அந்நாட்டு நேரப்படி பகல் 1.06 மணிக்கு F-7 BGI என்ற சீன தயாரிப்பு விமானம் புறப்பட்டு சுமார் 25 நிமிடங்கள் கழித்து விபத்துக்குள்ளானதாக இன்டர்-சர்வீசஸ் பப்ளிக் ரிலேஷன்ஸ் டைரக்டரேட் தெரிவித்துள்ளது.

மதிய உணவு இடைவேளையின் போதே விமானம் பாடசாலை உணவகத்தின் கூரை மீது விழுந்துள்ளது. இந்த சம்பவத்தின் போது அங்கு மாணவர்கள் பலர் இருந்துள்ளனர்.

விமான விபத்தை தொடர்ந்து அப்பகுதி தீப்பற்றி புகை மண்டலமாக காட்சிளித்தது. (நி)

## இந்தியாவின் துணை ஜனாதிபதி இராஜினாமா



(டில்லி)

இந்தியாவின் துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இது தொடர்பாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

மருத்துவ ரீதியான காரணங்களுக்காக துணை ஜனாதிபதி பொறுப்பில் இருந்து நான் விலகுகிறேன். எனது இராஜினாமா உடனடியாக அமுலுக்கு வரும். எனது பணியில் நான் கவனம் செலுத்த எனக்கு ஆதரவு கொடுத்த குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் 25 அன்று குமாவோன் பல்கலைக்கழகத்தின் பொன்விழா கொண்டாட்டங்களில் கலந்து கொண்டபோது ஜக்தீப் தன்கர் மயக்கமடைந்த சம்பவத்தின் ஒரு மாதத்தின் பின்னர் அவரது இராஜினாமா வந்துள்ளது.

74 வயதான ஜெக்தீப் தன்கர், கடந்த 2022 ஆம் ஆண்டு இந்தியாவின் 14 ஆவது துணை ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

அவர், மாநிலங்களவையிலும், வங்காளத்திலும் மாநில ஆளுநராக தனது முத்திரையைப் பதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## காசா போர்

### முடிவுக்குக் கொண்டு வருமாறு 28 நாடுகள் கோரிக்கை

காசாவில் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இங்கிலாந்து உட்பட 28 நாடுகள் கோரியுள்ளன.

காசாவில் பொதுமக்களின் துன்பம் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது.

இஸ்ரேலின் உதவி என்ற திட்டம் ஆபத்தாக மாறியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள இந்த நாடுகள், உணவைத் தேடிவரும் மக்களுக்கு உதவிகளை குறைத்து வழங்குவது மற்றும் பொது மக்களை மனிதாபிமான மற்ற முறையில் கொல்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத செயல்கள் என்று இந்த நாடுகள் குறிப்பிட்டுள்ளன. (நி)

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கிழக்கே, யகுதியா பகுதியில் நேற்று முன்தினம் சுரங்க தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்தொன்று, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து 82 அடி ஆழம் கொண்ட பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந் துள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

டெனிசோவ்ஸ்கி சுரங்கம் மற்றும் நிலக்கரி பதப்படுத்தும் தொழிற்சாலை அமைந்த வீதியிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

ரஷ்யாவில் இது போன்ற தொழிற்சாலை சார்ந்த விபத்துகள் நடைபெறுவது அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாகவும், பாதுகாப்பு குறைபாடுகளால் இது போன்ற விபத்துகள் நடைபெறுகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்நிலையில் குறித்த விபத்து சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 42 ஆண்டுகளின் பின்னும்

# தமிழர்களின் மனங்களில் ஆறாத ரணங்களாய்!



ஒரு மனிதன் உணர்ச்சி மரத்துப் போய் நிர்வாணமான நிலையில் தலையில் கை வைத்து அமர்ந்திருக்க, சுற்றிலும் இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரிக்கும் புகைப்படத்தை காணாதவர்கள் இருக்க முடியாது.

ஜூலை கலவரத்தின் சாட்சியாக உலகத்தின் மனசாட்சியை உலுக்கிய புகைப்படம் அது. அந்தக் கலவரத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை, சிங்கள இனவெறியர்கள் கண்ட துண்டமாக வெட்டி வீசினார்கள். குடும்பத் துடன் தமிழர்களை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தினார்கள். வணிக வளாகங்கள், கடைகள், எரிபொருள் நிலையங்கள். திரையரங்குகள் என 5000 இற்கும் மேற்பட்ட தமிழர்களின் வர்த்தக நிறுவனங்களை குறிவைத்து காட்டு மிராண்டித்தனமாக சூறையாடினார்கள்.

தமிழர்களின் பொருளாதார அடித்தளத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனே நன்கு திட்டமிடப்பட்டு இந்தக் கலவரம் நடந்தது. ஆறு நாட்கள் சிங்கள வெறியர்களின் கையில் கொழும்பு மாநகரமும் தென்னிலங்கையும் இருந்தது.

தலைநகரமெங்கும் தமிழர்களின் மரண ஓலங்களும், தீயடங்காது எரியும் தமிழர்களின் வணிக நிலையங்களும் என கொழும்பு கோரமாய்க் காட்சியளித்தது. 1,50,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் உடைமைகள் இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.

காலங்கள் கடந்தாலும் தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிகள் நம் இரத்தத்தை உறைய உணர்ச்சிகளை கொந்தளிக்கச் செய்ய வைப்பவை. நடத்தப்பட்ட படுகொலைகள் நம் ஈழத்தமிழர்களின் வரலாற்றை வாசிப்பவர்கள் கண்ணீரின்றி கடக்க முடியாத நிகழ்வுகளுள் ஒன்று இந்த கருப்பு ஜூலை எனப்படும் ஜூலை கலவரம். 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிங்களப் பேரினவாத அரசாலும் சிங்கள இன வெறியர்களாலும் தமிழர்களுக்கு நடத்தப்பட்ட கொடூரங்களே "கறுப்பு ஜூலை" என்று குறிப்பிடக் காரணமாக இருக்கிறது.

"கறுப்பு ஜூலை" நிகழ்வு காலங்கள் கடந்தாலும் தமிழர்களின் மனதில் ஆறாத காயங்களையும் தீராத வலிகளையும் தமிழர்கள் மனதில் கிளறிக் கொண்டேயிருக்கும்.




# ஆடி அமாவாசை தீர்த்தம் ஆடி நம் முன்னோரினதும் நாட்டின் அதிதியாக இறந்த ஆத்மாக்களின் பிதிர்கடன் செய்வோம்

ஆடி அமாவாசை தினத்தில் பிதிர்கடன் தீரவும், தோஷங்கள் நீங்கவும், குலதெய்வம் ஆலயங்கள் கும்பாபிஷேகம் நடைபெறவும் நமது இறந்த முன்னோருக்கும், செம்மணியில் இறந்தவர்களதும், நாட்டின் யுத்த காலத்தில் இறந்த ஆத்மாக்கள் சாந்தியடையவும் எள் நீர் இறைத்து பிராமண உபசாரங்கள் செய்வது இறந்தவர்களது பிள்ளைகளின் கடமையாகும்.

சிவவாக்கியர் புரட்சிகரமான சிந்தனையில் உலகத்துக்கு உணர்த்துவதில் 512 ஆவது பாடல்களில்

**"மாந்தர் வாழ்வும் மண்ணில் மறந்த போது விண்ணிலே**
**சாந்தனான ஆவியைச் சரிப்படுத்த வல்லிரேல்"**

நாமும் நம் சந்ததியும் வேந்தனாகவும், மன்றுலாடும் விமலன் பாதம் காணலாம் என்பதனை உறுதிப்படுத்துகிறார்.

**சிவவாக்கியர் - 514 ஆவது சித்தர் பாடல்**
**காடுமேடு குன்று பள்ளம் கானின் ஆற கற்றியும்**
**நாடுதேசம் விட்டலைவர் நாதம் பாதம் காண்பரோ?**
**கூடுவிட்டு அகன்று உன் ஆவி கூத்தனூர்க்கே நோக்கலால்**
**வீடு பெற்று அரன் பதத்தில் வீற்றிருப்பர் இல்லையே**

பிதிர்தோசம் வழிபாடு குல தெய்வவழிபாடு இல்லாதவர்கள் நாடுதேசம் விட்டலைவர் நாதம் பாதம் காண முடியாது எனவும், உடல் விட்டு அகன்று ஆவி கூத்தன் ஊருக்கே நோக்கலால் வீடு பெற்று அரன் பதத்தை அடையாமல்போகும் எனவும்

**521 ஆவது சித்தர் பாடல்**
**காயகாயம் உண்பதாகக் கண்டவர் மதித்திட**
**மாயவித்தை செய்வது எங்கு மடிப்பு மோசம் செய்பவர்**
**நேயமாக் கஞ்சா அடித்துநேர் அபினைத் தின்பதால்**
**நாயதாக நக்கிமுக்கி நாட்டினில் அலைவரே**

**நீர்க்கடன், குலதெய்வ திருக்கோயிற்றிருப் பணிகளினால் பெரும் புகழால்,** இப்பொழுது வருத்திவரும் நாத்திகக் கொள்கையாகிய **பூதமாகிய கஞ்சா அடித்து நேர் அபின் உண்பதால் நாட்டினிலே அலையாமல்,** தெய்வத்திற்கும் திருநீற்றுக்கும் **நாத்திகப்பேயும் அஞ்சி ஒதுங்கும்.** மக்களெல்லோருஞ் சைவர்களாகித் திருநீற்றின் ஒளி விளங்கும், **சிவனடியார்கள் இனிதாக வாழும் சிவ பூமியாகும்.**

உலகத்தில் சிவபூமியில் கீரிமலை தீர்த்தம் நமது கண்டங்களை அதாவது சகலதோஷம், பிதிர் தோஷம் குலதெய்வ வழிபடாத தோஷம் நீங்கும் என்று கர்ண பரம்பரை வரலாற்றாக, அம்பாளின் வேண்டுதலை நிறைவேற்றிய சிவனால் தோற்றுவிக்கப்பட்ட **கண்டகி தீர்த்தம் எனவும்,** இங்கு ஆடி அமாவாசையில் நகுலாம்பிகை நகுலேஸ்வரன் எம் அம்மை அப்பனுடன் அழகுத் தமிழ் கடவுள், மாவட்டபுரம் வள்ளிதெய்வானை உடன் உறை மாவைக்கந்தன் தீர்த்தத்தில் நாம் தீர்த்தம் ஆடினால், நாமும், நம் நாடாகிய சிவபூமியும் அங்கு வாழும் அனைவரும் பிதிர்தோஷமும் குலதெய்வ ஆலயங்களின் புணருத்தானமான திருப் பணிகள் நிறைவேறவும், **சகல துன்மார்க்க மரணம் மற்றும் செம்மணியில் இறந்தவர்கள் மற்றும் யுத்த அனர்த்தங்களால் அல்லைபட்டும் மரணித்தவர்களின் ஆவியாகிய ஆத்மா அமைதி பெறுவதுடனும்** நம் முன்னோரும் ஆசீர்வாதமும் மகிழ்ச்சியும் அடைந்து வாழ்த்தும் **தற்போது துன்மார்க்க இழப்பு, துர்நடத்தையான சொந்தங்கள் நீங்கி அமைதி பெற எம்பெருமானை நன்றியுடன் திருமுறைகள் ஓதி பிரார்த்திப்போம்.**

இந்தியா மகாத்மா காந்தி இங்கு தரிசனம் செய்து, "தனது அஸ்த்தி இங்கு இது தீர்த்தக் கரையில் கலக்கவும் பிரார்த்தனை செய்து" இங்கு அஸ்த்தி கரைத்ததும் அறியலாம். **இது தீர்த்தக்கரை திருத்தம் செய்ய அறியர்களும், நலம் விரும்பிகளும் செய்யவேணும் என்பதனை இறைவனைப் பிரார்த்திப்போம்.**

**சிவவாக்கியர் - பாடல் 531**
**சிவாயவசி என்னவும் செபிக்க இச் சகம் எலாம்**
**சிவாய வசி என்னவும் செபிக்கயாவும் சித்தியாகும்**
**சிவாயவசி என்னவும் செபிக்க வானம் ஆளலாம்**
**சிவாயவசி என்பதே இருதலைத்தீ ஆகுமே.**

காலையிற் தெய்வீகப் பொலிவோடு காட்சி தரும் ஞாயிற்றுக்குச் சிவனடியே அன்றிப் பிறிதொன்றையும் நினையாத தவத்தினரையும் ஐந்தெழுத்து மந்திரத்தை செபித்து உருவேற்றினவர்களையும் தெய்வீகப் பொலிவோடு தோன்றும்.

நாமும் ஆடி அமாவாசை தினத்தில் நீராடி எள்நீர், இறைத்து அயோத்தி, மதுரை, மாயா, காசி காஞ்சி, அவுந்திகை, துவாரகா ஆகிய சப்த நதிகளில் இந்தத் தீர்த்தங்களில் எள்ளும் நீரும், இணைக்கும் போது பிதிர்களுக்கு அவர்களுடைய தாகத்திற்கும். உணவாகச் சென்று கிடைப்பதினால் அவர்களுடைய **பிதிர் சாபத்தில் இருந்து நீங்கி எங்களுடைய வம்சம் தழைக்கவும்,** மகிழ்ச்சியாக ஆசீர்வதிப்பார்கள். அத்துடன் **துன் மரணம் யுத்தத்தாலும் இறந்தவர்களும் மகிழ்ச்சி அடைந்து அவர்களது ஆசீர்வதிப்பார்கள்.**

**க.கு.க.சிவபாலன்**
**ஈழத்துச் சிதம்பரம்**
**மாணிக்கவாசகர் மடாலயம்**



(சி - 3477)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற உணவுச் சேகரிப்பும் தவறான பொதியிடலும் உணவைப் பழுதடையச் செய்யும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உணவுற்பத்தியில் நாம் எந்தள விற்கு சிரத்தையெடுக்கின்றோமோ அதே நேரத்தில் உற்பத்தி செய்த உணவை மேலும் அதனை மதிப் பேற்றஞ்செய்து பெறப்படும் உற் பத்திப் பொருட்களை சேகரித்து வைக்கும் இடங்கள் சுத்தமானதாக இல்லாதிருப்பதும் இன்னும் அவற்றை பொதிசெய்வதில் பயன் படுத்தப்படும் தரமற்ற பொருட் களும் பொதிசெய்யும் முறைகள் பொருத்தமற்றதாக இருப்பதும் இவ்வாறான உணவுப்பொருட்கள் பழுதடைய வாய்ப்புக்களை உரு வாக்கிவிடும். எந்த வகையிலும் உணவுப்பொருட்கள் தரமற்ற செயன்முறைகளின் கீழ் விற் பனைக்கு வரும்போது அது நுகர் வோரை வெகுவாக பாதித்து விடும். குறிப்பாக குழந்தைகள் மற்றும் நோயெதிர்ப்பற்ற நோயாளி கள் இவ்வகையான உணவுப் பொருட்களை குறிப்பாக பிஸ்கட் களை உணவாக கொள்ளும் போது அது அவர்களுக்கு வேறு பல நோய்களை உருவாக்கிவிடும் ஆபத்தை உருவாக்கிவிடுகின் றன.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் தரமான ep yap; (low quality packaging) பொதிசெய்யப்பட்டிருக்கின்ற னவா அல்லது தரமான பொருட் களைப் (low quality material packaging) பயன்படுத்தி பொதி செய்யப்பட்டிருக்கின்றனவா என நாம் கவனிப்பதில்லை. இதன் காரணமாக பல உணவுப் பொருட் கள் பொதிசெய்யப்பட்டிருக்கும் நிலையில் பழுதடைந்திருப்பதும் குறிப்பாக மிகவும் சிறிய சிவப்பு எறும்புகள் (red ants) அதனுள் புகுந்து அந்த உணவுப்பொருட் களை உண்ணத்தொடங்கியதும் அந்த உணவுப் பொருட்கள் பழுத டையத் தொடங்கிவிடுகின்றன. பொதி செய்யும் பொருட்கள் தரமா னதாக இல்லாதிருப்பின் அவற்றை சிவப்பெறும்புகள் இலகுவில் துளை யிட்டு உணவை பதம்பார்த்து விடுகின்றன.

குறிப்பாக பிஸ்கட்கள், நூடில்ஸ் கள் மற்றும் இனிப்புவகை உணவுப் பொருட்கள் சரியான பொதியிடல் பொருட்களை பயன் படுத்தி பொதி செய்யப்படாதிருப்பின் இங்கே எறும்புகள் உட்புகுந்து உணவை அவை சிதைவடை வதும் மேற்குறிப்பிட்ட எறும்புகள் அந்த உணவுப்பொதியை சேத மாக்கி உணவு கெடுப்போவதற்கு காரணமாகிவிடும். சிவப்பெறும்பு களிலுள்ள கடிக்கும் உறுப்பு (mandibles) இலகுவாக பொதி யிடப்பட்டுள்ள பதார்த்தத்தை துளைத்து உட்புகுவதனால் அத னுள் ஈரப்பதன் அதிகரிக்க பூஞ்சை களின் தொற்றும் அதனுடன் களஞ் சிய அறைகளில் காணப்படும் ஒருவகை சிற்றுண்ணியும் (mites) உட்சென்றுவிடும். இவற் றினால் உணவுப்பொருட்கள் சேத மடைந்து நாம் உண்பதற்கேற்றதல் லாததாக மாறிவிடுகின்றன. இவ் வகையான தொற்று ஏற்பட்ட உணவுப்பொருட்களை உணவாகக் கொண்டால் உணவுசெரிமான பிரச் சினைகளுடன் ஒவ்வாமை தன்மை களும் உண்டாக வாய்ப்பிருக்கின் றன. மேலும் இவ்வகை பழுத டைந்த உணவுகள் நஞ்சாவ தற்கான வாய்ப்புகளும் உண்டு.

பொதியிடப்பட்ட உணவினை குறிப்பாக பிஸ்கட்கள், இனிப்பு பொருட்கள், இன்னும் பலவகை உணவுப்பொருட்கள் சிவப்பு எறும்பு களினால் சேதமாக்கப்படுவது குறிப் பாக கடைகள் மற்றும் அவற்றை களஞ்சியப்படுத்தப்பட்ட இடங்கள் சுத்தமானதாக இல்லாதிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறாக எறும்புகள் அதிகமான இருக்கும் இடங்கள் சுத்தப்படுத்தப்படாது களஞ் சியப் படுத்தும் போது மேற்குறிப்பிட்ட சேதம் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது. இவ்வாறான இடங்கள் உணவு சுகாதாரப் பரிசோதகர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படல் வேண்டும். தரமற்ற இடத்தில் பொதி யிடப்பட்ட உணவுப்பொருட்களை களஞ்சியப்படுத்தும் போது பூச்சி பீடைகளின் தாக்கம் ஏற்படவும் எலி மற்றும் கரப்பான பூச்சிகளின் தாக்கமும் ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வாறாக தரமற்ற வகையில் சுகாதாரமற்ற இடங்களில் பெரும் அளவில் சேமிக்கும் போது சேத முறும் உணவுப்பொருட்களை இனங்கண்டு அவற்றை விற்ப னைக்கு உதவாததாக இலேபலிடப் பட்டு அழிக்கப்படல் வேண்டும். மாறாக இவற்றை மக்கள் வாங்கி உணவாக கொண்டால் அதிலி ருந்து உணவுசார் நஞ்சாதல், மற் றும் பூஞ்சைகள் தொற்று இன்னும் சிற்றுண்ணி மற்றும் பூச்சிப் பீடைகளின் மலக்கழிவுகள் உமிழ் நீர்சுரப்புக்கள் என அனைத்தையும் உண்ணும் பிரச்சினைகளை எதிர் நோக்கவேண்டியிருக்கும்.

நாம் உள்ளூரில் தயாரிக்கும் உணவுப்பொருட்களையும் தரமான பொதியிடல் பதார்த்தங்களை பயன் படுத்தி பொதிசெய்தல் மிகவும் நல்லது. உணவுப்பொருட்கள் பொதி யிடலில் உள்ள தவறுகளால் பழுத டையும் போது அது நமது உள்ளூர் தயாரிப்புக்கள் பற்றிய நம்பகத் தன்மையை நலிவடைய வைத்து விடும். வாழ்வாதாரத்தை மைய மாக வைத்து பலவகை உள்ளூர் தயாரிப்புக்கள் தற்போது சந்தையில் பலவகைகளில் காணப்படுகின்றன. இவ்வாறான உணவுப்பொருட் களுக்கான உற்பத்தித்திகதி மற்றும் காலாவதி திகதிகள் தரப்பட்டிருந்தும் தரமற்ற பொதிசெய்தலால் அவை விரைந்து கெட்டுவிடும் நிலைக்கு வந்துவிடுகின்றன. அத்துடன் இவ்வாறான உணவுப்பொருட்களின் தரம் பற்றிய நம்பகத்தன்மையும் கேள்விக்குறியாகிவிடும். எமது உள்ளூர் பொருட்களை பயன்படுத்தி அல்லது கிடைக்கும் பொருட்களை பயன்படுத்தி பொதிசெய்யும் போது அதனை ஆய்வுக்குட்படுத்தி உணவினது தரம்குறைவடையும் தன்மைகளையும் திகதிகளையும் கணக்கிட்டு உணவு தரக்கட்டுப் பாட்டு நியதிகளின் அறிவுரைக் கமைய அவற்றுக்கான காலாவதி திகதி நிர்ணயஞ்செய்தல் வேண் டும். உணவின் தன்மை அதனது நிலை மற்றும் அதிலுள்ள பொருட் களின் கூட்டு என்பனவற்றுடன் அதில் கலந்திருக்கும் இனிப்பும் இதில் காரணங்களாக அமைகின் றன.

மேலும் உணவுப்பொருள் பொதி யிட்டபின் வைக்கப்படும் களஞ்சியம் அல்லது அறைகள் குறிப்பாக கவனிக்கப்படல் வேண்டும். தரமான பொதியிடல் மூலம் முக்கியமான பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ள லாம் ஆயினும் பயன்படுத்தப்படும் உணவின் தன்மையும் இதற்கொரு காரணமாகும். வெளியிலுள்ள பல் வேறு நிற வகைகளைக்கொண்ட பொதியிடலை நம்பி உணவினை கவனிப்பதை தவிர்த்துவிடாதீர்கள். தரமற்ற எந்த பொதியிடலும் உள் ளுள்ள உணவினை சேதமடைவதி லிருந்து தவிர்க்க முடியாது. அதனால் பொதியிடலில் பயன்படுத்தப்படும் பதார்த்தத்தின் வகை, ஈரலிப்பை தவிர்க்கும் நிலை மற்றும் உணவுப்பொருளிலுள்ள ஈரப் பதன் மற்றும் அதிலுள்ள கூட்டுப் பொருட்கள் இன்னும் இனிப்பு வகைகள் என்பன இதில் கவனிக் கப்படல் வேண்டும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



மேலும் தர மற்ற பொதியிடல் பதார்த்தத்தை எறும்புகள் விரைந்து சேதமாக்காதவாறு பயன்படுத்தல் வேண்டும். இன் னும் சிவப்பு எறும்புகள் ஓரளவு தடிப்பான தரமானதாக இருந்தா லும் அதனை பயன்படுத்தி உணவை பொதிசெய்தலும் தவிர்க் கப்படல் வேண்டும். கடைகளில் இன்னும் பலவகை பொருட்களை விற்பனை செய்யும் அங்காடிகளில் பெரிய சாக்கினுள் வரும் உணவுப் பொருட்கள் குறிப்பாக சீனி, சக்கரை என்பன அந்த அங்காடிகளில் சிறியளவிலான பைக்கற்றுக்களாக மெலிதான பொலித்தீன் பைகளால் பொதிசெய்யப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இவற்றில் மெலிதான பொலித்தீன் பைகளை சிவப்பு எறும்புகள் இலகுவில் சேதமாக்கி உட்புகுந்து உண வினை உட்கொள்ள ஆரம்பித்து விடும். இவ்வகையாக பூச்சிப்பீடை கள் சேதத்தினால் உணவுப் பொருட்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டு உணவுப்பொருள் விற் பனைக்குகந்ததல்லாததாக மாறி விடும்.

இவற்றை விட பொதியிடப்பட்ட உணவுப்பொருட்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் விற்கப்படாவிட்டால் அவற்றின் காலாவதியாகும் திகதியை (expiry date) மாற்றி அல்லது அந்த லேபலை உரித்து, அழித்து, மாற்றி விற்பனைக்கு விடப்படுவதும் கண்டறியப்பட்டுள் ளது. காலாவதியாகும் திகதியை மாற்றியமைப்பது தண்டனைக் குரிய குற்றம். அவ்வாறு எதனை யும் அவதானித்தால் உணவு பரிசோதகர்களுக்கு அறியத்தருவது எமது மக்களை காப்பாற்றும் நல்ல செயலாகும். ஏனெனில் இவ்வா றான தொற்றுக்கள் அந்த உணவுப் பொருட்களில் ஏற்படுவதனை தவிர்க்கமுடியாது.

விற்பனைக்கு வைக்கப்படும் உணவுப்பொருட்களின் நம்பகத் தன்மையை உறுதி செய்து அவ ற்றை வாங்கி நாம் உணவாக்க வேண்டும். எமது மக்களுக்கு பொதியிடப்பட்ட உணவு பற்றிய விழிப்புணர்வினை தருவதற்காக மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் தரப்பட்டுள்ளன. இது பற்றிய ஆய்வு விவசாய உயிரியல் துறையில் சிறப்பு ஆண்டு மாணவியினால் தற்போது மேற்கொள்ளப்படுகின் றது. ஆய்வு முடிவுகளும் இவ்வா றான கட்டுரையூடாக விளக்கப் படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் ஜனாதிபதிகளின்
# சலுகைகளை நீக்கும் சட்டமூலத்திற்கு அனுமதி



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளை ரத்து செய்யும் வகையில், ஜனாதிபதியின் உரிமைகள் சட்டத்தை ரத்து செய்வதற்கான சட்டமூல வரைவுக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இந்த நடவடிக்கை "வளமான நாடு - அழகான வாழ்க்கை" எனும் அரசாங்க கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது அரசின் செலவினங்களைக் குறைத்து பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கு உறுதியளிக்கிறது. அதன்படி, 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதியின் உரித்துக்கள் சட்டத்தை நீக்குவதற்காக சட்டமூலமொன்றை தயாரிப்பதற்காக கடந்த ஜூன் மாதம் 16 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த பணிகளுக்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் உரித்துக்கள் (நீக்கல்) சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

## வருடந்தோறும்
# காயங்கள் காரணமாக 12,000 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் காயங்களால் ஆண்டுதோறும் 12,000 பேர் உயிரிழக்கின்றனர் என சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காயங்கள் காரணமாக ஆண்டுதோறும் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் அறிக்கையின்படி, 15 முதல் 65 வயதுக்குட்பட்டவர்களே காயங்களால் பெரும்பாலும் உயிரிழக்கின்றனர்.

சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, இவ்வாறான காயங்கள் பெரும்பாலும் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சரியாக செயற்படுவதன் மூலம் தவிர்க்கக்கூடியவை. குறிப்பாக, காயங்கள் ஏற்பட்டதும் உடனடியாக அடிப்படை முதலுதவி அளிப்பது மனித உயிர்களை காப்பாற்றுவதிலும் சிக்கல்களை குறைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

விபத்துகளின் மூலக் காரணங்களைப் பற்றியும், முதலுதவியின் அவசியத்தை பற்றியும் மக்களிடையே எடுத்துரைப்பது பாதுகாப்பான சமுதாயத்திற்கான கட்டமைப்பை உருவாக்க உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## 7 மாதங்களுக்குள்
# 31 அதிகாரிகள் அதிரடியாக கைது!

(கொழும்பு)


கடந்த ஏழு மாத காலப் பகுதிக்குள் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் அரசாங்க அதிகாரிகள் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடப்பு ஆண்டின் தற்போது வரையான ஏழு மாத காலப் பகுதிக்குள் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கான விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் 44 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

அதன் மூலம் 31 அரசாங்க அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பாடசாலை அதிபர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் உள்ளடங்கியுள்ளனர்.

இதற்கிடையே இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடிகளைத் தடுப்பதற்கான விசாரணை ஆணைக்குழுவுக்கு நடப்பு ஆண்டில் மட்டும் 2138 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதனடிப்படையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)





வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து நடத்தும், வடக்கு மாகாண பனை எழுச்சி வாரத்தை முன்னிட்டு "எங்கள் வாழ்வியலில் பனை" என்னும் தலைப்பிலான கண்காட்சியை, நல்லூர் முத்திரைச்சந்தியிலுள்ள சங்கிலியன் பூங்காவில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பித்துவைக்கப்பட்டது.


# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
# பெறுகை அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | ஒப்பந்த காலம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) (வரி நீங்கலாக) | ICTAD தர பதிவு | கேள்வி வங்கி பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/ W.H/25/ 1114-05 | Construction of Paddy Drying Yard Warehouse at Kanagambikaikulam, Kilinochchi, | 90 நாட்கள் | 3.9 மில்லியன் | C9 or above, Building | ரூபா. 60,000/- 18.11.2025 வரை | 2000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.

I. நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாணஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப் படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்

2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
(தொ.பே.இல:-021228 5663, பக்ஸ் இல:-021228 3966)

3. கேள்வி ஆவணங்களை **24.07.2025** ஆம் திகதியிலிருந்து **05.08.2025** ஆம் திகதி வரை முற்பகல் **9.00** மணி முதல் பிற்பகல் **3.00** மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

4. இப்பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) **01.08.2025** ஆம் திகதி முற்பகல் **10.30** மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.

6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "KN/ ............." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு **06.08.2025** ஆம் திகதி முற்பகல் **10.30** மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சு.முரளிதரன், திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர்/ மாவட்டச் செயலர், கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-3481)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வரலாற்றைப் படிப்பதை விட உலகில் வரலாறு படைப்பதே இனிமை. – ஜவகர்லால் நேரு

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## 1983 ஜூலைக் கலவரமும் செம்மணிப் புதைகுழியும்

1983 ஜூலைக் கலவரம் இடம்பெற்று இன்று 42 வருடங்கள் ஆகிவிட்டன.

தென்பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இன அழிப்பில் அப்பாவித் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

தமிழர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகள் எரியூட்டப்பட்டன.

பெருஞ்சொத்துக்களோடு வாழ்ந்த தமிழ் மக்கள் உடுத்த உடையுடன் அங்கிருந்து கப்பல் ஏறினர்.

இந்த நிட்டூரம் நடந்ததோடு சிங்களப் பேரினவாதத்தின் கொலை வெறி நின்றுபோனதென்றால் இல்லை.

இப்போதும் செம்மணியில் மண்ணைத் தோண்டி எங்கள் உறவுகளின் என்புக்கூடுகளை எடுத்துக் கொண்டேயிருக்கின்றோம்.

ஆம், இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் சுற்று அகழ்வு நேற்று முன்தினம் 21ஆம் திகதி இடம்பெற்றபோது 7 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

தவிர, நேற்றைய தினம் (22) எட்டு எலும்புக் கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

ஆக, 2025 ஜூலை 22ஆம் திகதி வரையான அகழ்வுகளில் 80 என்புத்தொகுதிகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன.

இந்த எண்ணிக்கை இன்னும் எத்தனையாகுமோ என்ற ஏக்கம் மட்டுமே எம் தமிழ் மக்களைச் சூழ்ந்துள்ளன.

1983 ஜூலைக் கலவரத்தில் சிங்கள வெறியர்கள் தமிழ் மக்களை வெட்டியும் எரித்தும் கொன்று குவித்தனர்.

ஆனால் செம்மணியில் படையினர் தமிழ் மக்களைக் கொன்று புதைத்துள்ளனர் எனும் போது, இலங்கையில் தமிழ் இனத்தின் கதி இதுதான் என்பதை உலகம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக அந்த இன மக்களை அழிப்புச் செய்கின்ற கொடுமை அரங்கேறி வருகிறது.

எனினும் அவர்கள் அரசாங்கம். அவர்கள் ஆள்பவர்கள். எனவே அவர்கள் தமிழ் மக்களை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவ்வாறு இன அழிப்புச் செய்தாலும் அந்த அரசாங்கத்தோடு சேர்ந்து போகவேண்டும் என்பதுதான் உலக நாடுகளதும் சர்வதேச அமைப்புகளினதும் நிலைப்பாடாக இருக்குமாயின், அதைவிட்ட கொடுமையும் அதர்மமும் வேறுஎதுவுமாக இருக்க முடியாது.

ஆக, இலங்கை ஆட்சியாளர்கள் காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்துவிடுகின்ற பேரினவாத வெறிக்கு நம் தமிழ் மக்கள் பலியாகிக் கொண்டே இருக்கிறார்கள். அந்தக் கொடுமை 1983 ஜூலைக் கலவரத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. ஏன் 2009 மே 18 இற்குப் பின்னரும் ஓயவில்லை.

அதற்குப் பின்னராக நடந்த அராஜகத்தின் சாட்சியமாகக்கூட செம்மணி மனிதப் புதைகுழி இருக்கலாம்.

என்ன செய்வது 83 ஜூலைக் கலவரம் நடந்து இன்று 42 வருடங்கள் ஆகிவிட்டது மட்டுமல்ல. சிங்களப் பேரினவாதம் மேற்கொள்ளும் தமிழின அழிப்பு 42 ஆண்டுகளாகத் தொடர்கிறது என்ற உண்மையும் இங்கு உணர்தற்குரியது.

# வழங்கிய வாக்குறுதிகளின்படி இனப்பிரச்சினையைத் தீர்க்குக

## பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா வலியுறுத்து

அநுர அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளின் படி தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனத் தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்திருந்தார்.

விரைவில் அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் கூறப்பட்டது. அத்துடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றெல்லாம் உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

இனப்பிரச்சினைக்கான, ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துவிட்டது. எனினும் புதிய அரசமைப்பு தொடர்பில் அவர் தற்போது ஒரு வசனம் கூட கதைப்பதில்லை. குறைந்தபட்சம் எப்போது இதற்குரிய பணி ஆரம்பமாகும். எப்போது நிறைவு பெறும் என்பது தொடர்பில் கூட கருத்துத் தெரிவிப்பதில்லை.

இதன்மூலம் நாட்டில் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கு இருந்த வாய்ப்பை அவர் இல்லாமல் செய்து வருகின்றார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்து அதிகாரத்தைச் சுவைத்து வருகின்றார். அதற்கு அப்பால் சென்று அரசமைப்பு மறுசீரமைப்பைச் செய்வதற்கும் அவர் தயாரில்லை என்பது தெரிகின்றது.

மேற்படி உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாதுள்ள சூழ்நிலையில் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மையை இல்லாது செய்வதற்கும் அரசமைப்பு சபையின் அதிகாரத்தைக் குறைப்பதற்கும் அரசு முயற்சிக்கின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதற்காக அரசமைப்பு மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது. இது பாரதூரமான விடயமாகும். புதிய அரசமைப்பு எனக் கூறிவிட்டு, மக்கள் ஆணையை மீறும் வகையில் அரசின் அணுகுமுறைகள் உள்ளன என்றார். (ம-7)

# செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்

## அவுஸ்திரேலியாவின் கிறீன்ஸ் கட்சி

(கொழும்பு)

செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று அவுஸ்திரேலிய கிறீன்ஸ் கட்சியின் நியூ சவூத் வேல்ஸ் மாநில செனட்டர்டேவிட் சூபிரிட்ஜ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

உண்மையை ஒருபோதும் புதைக்க முடியாது. இலங்கையில் தமிழ் மக்கள்மீது கட்டாயமாக நடத்தப்பட்ட காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் இனப்படுகொலையை நினைவூட்டும் வகையில் செம்மணிப் புதைகுழி அமைந்துள்ளது.

29 ஆண்டுகள் கடந்தும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. நீதி நிலைநாட்டப்படவில்லை.

எனவே செம்மணி உட்பட இலங்கையில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் குறித்து சர்வதேச அளவில் கண்காணிக்கப்படும் தடயவியல் விசாரணை அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## 37 வயது கனேடியப் பெண் கட்டுநாயக்கவில் கைது

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு 181 மில்லியன் ரூபா மதிப்புள்ள ஹாஷிஷ் போதைப்பொருள் கடத்த முயன்றதற்காக 37 வயது கனேடியப் பெண் ஒருவர் நேற்றுக் காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் கனடாவின் மாண்ட்ரீலில் இருந்து டோஹா வழியாக கட்டார் ஏர்வேஸ் விமானம் மூலம் இலங்கை வந்திருந்தார்.

வழக்கமான சோதனையை மேற்கொண்ட சுங்க அதிகாரிகள் அவரது பொருட்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 18 ஆயிரத்து 123 கிராம் ஹாஷிஷ் போதைப் பொருளைக் கண்டு பிடித்தனர்.

இதனையடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கை சுங்கத்துறையின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு ஆரம்ப விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (ம-7)

# மாவிட்டபுரத்தில் பஞ்சரதப்பவனி

(மாவிட்டபுரம்)

சோழ இளவரசி மாருதபுர வீகவல்லி போற்றித்துய்த்த மாவைக் கந்தனின் இரதோற்சவம் இன்று பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் விசுவாவசு வருட பிரம்மோற்சவமானது இம்முறை வெள்ளிக்கொடிக் கம்பத்தில் துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்று வரும் நிலையில் இத் [illegible] இன்று பூர்வாங்கக் கிரியைகள் விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து காலை 7.20 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை இடம்பெறவுள்ளது.

அதில் சோடச உபகாரம் ஏற்று மாவைக் கந்தசுவாமியார் முகருத்திர திருத்தேரிலும் விநாயகர் முதலான பரிவார மூர்த்தங்கள் ஏனைய ரதங்களிலும் எழுந்தருளலைத் தொடர்ந்து காலை 9.36 மணிக்கு பஞ்சரதப் பவனி சிறப்புற இடம்பெறவுள்ளது. (ம-7)

## மிளகாய்த் தூள் வீசி முச்சக்கரவண்டிகள் கொள்ளை

### பெண் உட்பட மூவர் கைது

மிளகாய்த்தூள் வீசிவிட்டு முச்சக்கர வண்டிகளைக் கொள்ளையிடும் சம்பவம் தொடர்பில் பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கஹதுடுவ பொலிஸ் பிரிவின் பொல்கசோவிட்ட பகுதியில் கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் (21)மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 06 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 05 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

அவர்கள் வாடகைக்குச் செல்வது போன்று முச்சக்கர வண்டிகளில் பயணித்து சாரதிகளின் முகத்தில் மிளகாய்த் தூள் வீசி முச்சக்கர வண்டிகளைக் கொள்ளையடித்து வந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேக நபர்களில் ஒருவரின் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கலவான மற்றும் கஹதுடுவ பிரதேசங்களைச் சேர்ந்த 20 முதல் 30 வயதிற்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் கஹதுடுவ, பொரலஸ்கமுவ மற்றும் மொரகஹஹேன பொலிஸ் பிரிவுகளில் முச்சக்கரவண்டிகளைக் கொள்ளையடித்துள்ள நிலையில் 04 முச்சக்கர வண்டிகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 20

சொக்கன்

அவங்களும் நம்முடன் இருந்துட்டுப் போகட்டுமே என்று சொல்கிற அரேபியர்கள் சிலர் இருந்தார்கள். யூதர்கள் அவர்களுடைய உதவியைப் பயன்படுத்திக் கொண்டு பாலஸ்தீனர்கள் மத்தியில் மெல்லமாக ஊடுருவ ஆரம்பித்தார்கள்.


இதுதவிர சில பாலஸ்தீனர்களுக்குக் காசு கொடுத்து ஆசை காட்டினார்கள். எப்போ, எங்கே, எப்படித் தாக்குதல் நடக்கப் போகிறது என்று விவரம் சொல், காசு தருகின்றோம்.

இந்தக் கையில தகவல், வாயில தோசை திட்டம் பிரமாதமாக வேலை செய்தது. இதன் மூலம் பல தாக்குதல் முயற்சிகளை யூதர்கள் முன்கூட்டியே தெரிந்து கொண்டு பாலஸ்தீனர்களுக்கு நல்ல பதிலடி கொடுத்தார்கள்.

இதனால் பாலஸ்தீனர்களுக்கு எரிச்சல். நம் ஊரில் வந்து உட்கார்ந்து கொண்டு நம்மையே எதிர்க்கிறார்களே என்று யூதர்கள் மீது இன்னும் ஆவேசத்துடன் மோத ஆரம்பித்தார்கள்.

பாலஸ்தீனர்களின் கோபத்தில் நியாயம் இருந்தது. அப்போது பலஸ்தீனத்தை ஆட்சி செய்துகொண்டிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இந்த மண்ணில் சம உரிமை உண்டு என்பதுபோல் நடந்து கொண்டது. இது அரேபியர்களுக்குப் பிடிக்கவில்லை. இது எங்களுடைய பூமி இங்கே மைனாரிட்டிகளான யூதர்களை எப்படி எங்களுக்குச் சமமாகநடத்தலாம்? என்று கொதித்தார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் பாலஸ்தீன மண் வருங்காலத்தில் யாருக்குச் சொந்தமாகப் போகிறது என்கிற விடயத்தில் அரேபியர்கள்,யூதர்கள் இருதரப்பினருக்கும் பயம் வந்து விட்டது. அவர்கள் ரொம்பக் காலம் சேர்ந்து வாழ முடியாது என்பது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது.



யூதர்கள் யோசித்தார்கள். இப்போது பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பயந்து அரேபியர்கள் சும்மா இருக்கிறார்கள். நாளைக்கே ஏதாவது ஒரு பிரச்சினை வந்து பிரிட்டிஷ் அரசாங்கம் இங்கிருந்து வெளியேறிவிட்டால் நமக்கு யார் பாதுகாப்பு?

வேறு வழியே இல்லை நம்முடைய உளவுத்துறையை இன்னும் வலுவாக்கவேண்டும். உள்ளே வெளியே நமக்கு வரக்கூடிய ஆபத்துக்களை முன்கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டும். இதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம். எவ்வளவு பணமும் செலவழிக்கலாம் தப்பே இல்லை!

கஜானாவில காசு இராணுவம் ஆயுத பலத்தையெல்லாம் விட எதிராளி என்ன செய்கிறான் என்பதைப் பற்றிய தகவல்கள்தான் மிக முக்கியமானவை என்பதை யூதர்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். அதன் பிறகு அவர்களுடைய போர்த் தந்திரங்களே தலைகீழாக மாறி விட்டன. அதுவரை நேருக்கு நேர் யுத்தத்தில் மட்டும் கவனம் செலுத்திக்கொண்டிருந்தவர்கள் இப்போது பின்னணியில் ரகசியமாக வேட்டுவைக்கும் முயற்சிகளில் இறங்க ஆரம்பித்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் யூதர்கள் கற்றுக் கொண்ட உளவுத்துறைப் பாடங்கள்தான் இன்றுவரை அவர்களுக்குப் பெரிய பலமாக இருக்கின்றன. பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி எதிரியைப்பற்றிய தகவல்களைத் திரட்டுவது. பிறகு அதெல்லாம் சரியான விவரங்கள்தானா அல்லது உட்டாலக்கடி வேலையா என்று உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகள், நம்முடைய படைக்குள் எதிராளி ஊடுருவாதபடி பார்த்துக் கொள்வது,அப்படியே தவறிப் போய் ஒன்றிரண்டு பேர் உள்ளே வந்து விட்டாலும் அவர்கள் மூலமே தவறான தகவல்களை அந்தப் பக்கம் பரப்பி விட்டு விளையாடுவது, நம்முடைய பலம் ஒன்று என்றால் அது பத்து,நூறு, ஆயிரமாகத் தெரியும் படி மாயத் தோற்றங்களை உருவாக்கி மிரட்டுவது என்று யூதர்களின் உளவு பலம் படிப்படியாக அதிகரித்து கொண்டிருந்து.

யூதர்களின் அதிஷ்டம் இதுமாதிரி கில்லாடித்தனமான வேலைகளைச் செய்வதற்கு ஏகப்பட்ட இளைஞர்கள் முன்வந்தார்கள். உளவுப் பணியில் இருக்கும் ரகசியத்தன்மை த்ரில் அவர்களுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அடிப்படை விடயங்களை முணைப்புடன் கற்றுக் கொண்டார்கள். புதிதாக யோசித்து வித்தியாசமாகச் செயல்பட்டு யூதர்களுடைய உளவுத்துறையை எல்லாம் தெரிந்து ஏகாம்பரம்களாக மாற்றினார்கள். இந்த இளைஞர் படை தான் பின்னர் இஸ்ரேல் தேசத்துக்கும் அதன் உளவுத்துறையாகி மொசாட்டுக்கும் பலமான அஸ்திவாரமாக அமைந்தது.

## கடத்தல் படை

தெருவில் இரண்டு பேர் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். நீயா நானா என்று ஒரே சத்தம், கூச்சல் அடிதடி வெட்டுக்குத்து.

அப்போது அந்தப் பக்கமாக ஒரு பொலிஸ்காரர் வருகிறார். இவர்களுடைய சண்டையைப் பார்த்ததும் வண்டியை நிறுத்தி இங்க என்னப்பா கலாட்டா? என்று விசாரிக்கிறார்.

உடனே பயந்து போன இருவரும் சண்டையை நிறுத்தி விடுகிறார்கள். தங்கள் தரப்பு நியாயத்தைச் சொல்கிறார்கள்.

இந்த நிலைமையில் சட்டத்தைக் கையில் வைத்திருக்கிற அந்த பொலிஸ்காரர் என்ன செய்யவேண்டும்? இரண்டு பேருக்கும் பொதுவாக நியாயமான ஒரு தீர்ப்பைச் சொல்ல வேண்டும் இல்லையா?

அதற்குப்பதிலாக அவர் இந்த சண்டைப் பார்ட்டிகளில் ஒருவரோடு சேர்ந்துகொள்கிறார். ஏன்யா வெறும் கையால அடிக்கிறே? இந்த லத்தியை வெச்சுக்கோ என ஆயுதம் கொடுத்து ஊக்குவிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம் அது அநீதி இல்லையா?

பாலஸ்தீனப் பிரச்சினையில் பிரிட்டிஷ் அரசாங்கம் அப்படிதான் நடந்துகொண்டது. அரேபியர்கள் யூதர்கள் இடையே பிரச்சினை வந்தபோது அவர்கள் ஏனோ அடாவடியாக யூதர்களைத் தொடர்ந்து ஆதரித்தார்கள். பலாஸ்தீன மண்ணில் யூதர்களின் பலம் பெருகுவதற்குத் தங்களால் முடிந்த உதவிகளைபெல்லாம் செய்து கொடுத்தார்கள்.

இந்தப்புண்ணிய கைங்கர்யத்தை ஆரம்பித்து வைத்தவர் ஆர்தர் ஜேம்ஸ் பால்ஃபர் எனும் இங்கிலாந்து அதிகாரி 1917 இல் அவர் வெளியிட்ட பால்ஃபர் பிரகடனம் தான் பாலஸ்தீனத்தில் யூதர்களின் உரிமையை அழுத்தமாக உறுதிப்படுத்தியது.

பிரிட்டிஷ்காரர்களே பச்சைக்கொடி காண்பித்துவிட்ட பிறகு யூதர்கள் சும்மா இருப்பார்களா? உலகம்முழுவதும் இருந்து தங்களுடைய உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் தெரியாதவர்களையெல்லாம் பாலஸ்தீனத்துக்குள் கொண்டு வந்தார்கள். இப்படி வருகிறவர்களுக்கு பாஸ்போர்ட் விசா எதுவும் தேவையில்லை யூதனா? உள்ளே வா இஷ்ட மித்ர பந்துக்களுடன் வந்தால் இன்னும் சந்தோஷம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 86 கைக்குண்டு...

கொழும்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர் வழங்கிய தகவல்களின்படி வவுனியாவில் 86 கைக்குண்டுகளுடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் வழங்கிய தகவலின்படி, கொழும்பிலிருந்து வருகை தந்த புலனாய்வுத்துறை அதிகாரிகளோடு வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவுப் பொலிஸாரும் இணைந்து செட்டிகுளம்-துட்டுவாகை மற்றும் நேரியகுளம் பகுதிகளில் உள்ள இரு வீடுகளில் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது நேரியகுளத்தில் வீடு ஒன்றின் அருகாமையில் பிளாஸ்டிக் பரல் ஒன்றினுள் 86 கைக்குண்டுகள், ரி-56 ரக துப்பாக்கிக்கான ரவைகள், கைத்துப்பாக்கிக்கான மூன்று ரவைகள், 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன நிலத்தின் கீழ் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

இதனை அடிப்படையாகக்கொண்டு அந்த வீட்டின் உரிமையாளரான 22 வயது இளைஞர் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## குழந்தையின்...

நேற்றைய அகழ்வு நடவடிக்கையின்போது குழந்தைகள் அருந்தும் பால் போத்தல் என சந்தேகிக்கப்படும் பொருள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## 4 இந்திய மீனவர்...

ஒன்றையும் அதிலிருந்து 4 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

பின்னர் குறித்த மீனவர்களையும், இழுவைப் படகையும் கடற்படையினர் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் பாரப்படுத்தினர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில் குறித்த மீனவர்களை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார். (ம-7,285)

## தமிழ் அரசியல்...

வாகனப் பவனி யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அணிதிரள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை, மறுநாள் வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களும் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடைபெறவுள்ளது.

அந்த நிகழ்வின் முக்கிய அங்கமாக விடுதலை விருட்சம் நடப்பட உள்ளது. அந்த விடுதலை விருட்சத்திற்கு நீர் சேகரிப்பு தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே தன்னார்வலர்கள் மற்றும் பொது அமைப்புகள் உங்கள் பிரதேசங்களில் விடுதலை விருட்சத்திற்கான நீரினைச் சேகரித்து கிட்டுப் பூங்காவில் இடம்பெறும் விடுதலை நிகழ்வில் கையளிக்க முடியும்.

மேலும் உங்கள் பிரதேசத்துக்கு வரும் நீர் சேகரிக்கும் வாகனத்திலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை முன்னிறுத்தி ஒரு குவளை நீரை நீங்களும் வழங்க முடியும் என குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவித்தனர். (ம-7,33)

## 80 மனித எலும்...

2ஆம் கட்டத்தின் 17ஆவது நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

அந்தவகையில், நேற்று மேலும் 8 மனித எலும்புக் கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன.

நேற்றைய கண்டுபிடிப்புகளுடன் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மொத்த எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 65 எலும்புக்கூடுகள் ஏற்கெனவே முழுமையாகத் தோண்டி எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## மூளாய்...

வேண்டி நேற்று மூளாய் பகுதி மக்கள் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூளாயில் இரு தரப்பினருக்கு இடையே இரு தினங்களுக்கு முன் ஏற்பட்ட வன்முறையையடுத்து ஒரு மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்டதோடு நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச் சூடும் நடத்தியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மூளாயில் பொலிஸாரின் கண்காணிப்பு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந் நிலையிலேயே தமக்கு நீதி வேண்டி மூளாய் மக்கள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இது குறித்து மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், "மூளாயில் உள்ள மதுபான நிலையம் ஒன்றிற்குள் இடம்பெற்ற மோதல் சம்பவமே கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வட்டுக்கோட்டை வன்முறைக்கு காரணமாக அமைந்துள்ளது.

மதுபான நிலையத்தில் வைத்து எமது பகுதியைச் சேர்ந்தவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது எமது பகுதியைச் சேர்ந்த இன்னொருவர் எழுந்து ஏன் அவரைத் தாக்குகின்றீர்கள் என கேட்டபோது அவரையும் தாக்கி படுகாயம் ஏற்படுத்தினர்.

இதுவே வன்முறைச் சம்பவத்துக்கான அடிப்படைக் காரணம் என்றனர். (ம-7,104)

## புதிய கல்வி...

எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அன்றைய தினம் விவாதிக்கத் திட்டமிடப்பட்டிருந்த இலங்கை மின்சார (திருத்த) சட்டமூலத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகப் பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.(ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2025.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 5898
R 6 3 9 1 2 5
அத சம்பத
R 9 1 2 5
சீட்டிழுப்பு இலக்கம் 473
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 0814
கடகம் 29 33 44 52

தன நிதானய
திகதி - 2025.07.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1928
L 06 41 46 68 L
Double Chance 54760

மெகா பவர்
திகதி 22/07/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2246
Q 15 08 12 20 72

ஜய ஜய
திகதி 2025.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 0166
K 4 6 7 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4140
சீட்டிழுப்பு திகதி 22.07.2025
F 12 71 73 77
F
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 1207
ரிஷபம் 17 34 49 56 ரிஷபம்
73409 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.07.2025 வெற்றி வாரம் 0606
B 4 3 6 6 8 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,350,741.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2872
சீட்டிழுப்பு திகதி 2025.07.22 தினம் செவ்வாய்க்கிழமை
09 15 32 75 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,173,441.60
DLB

சனிதா
திகதி 22.07.2025 வெற்றி வாரம் 5033
05 18 29 72 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,498,912.00
DLB

சசிரி
வெற்றி வாரம் 731
சீட்டிழுப்பு திகதி 22.07.2025
செவ்வாய்க்கிழமை
01 04 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4584
சீட்டிழுப்பு திகதி 22.07.2025 தினம் செவ்வாய்க்கிழமை
04 13 34 35 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,795,354.80
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 11 17 36 38 47
2048
22.07.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.583,754,016.40
DLB

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2698
சீட்டிழுப்பு திகதி: 2025.07.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,485,190.40
ADA KOTIPATHI
19 28 52 53 U
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3484) 076 825 7716 (ஆகாஸ்)



## மாப்பிள்ளை தேவை

1. கைதடி - வண்ணார்பண்ணை, இந்து, 1998, விசாகம், Bachelor of Arts (BA) Majoring in Politics University of otago, Graduate, policy analyst in Newzealand treasury, New zealand citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53788
2. சுன்னாகம், இந்து, 1997, கார்த்திகை, Msc in Bio Medical science, UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளைதேவை.53836
3. கந்தர்மடம், நல்லூர், இந்து, 2002, பூரட்டாதி, BSc Software Engnreeing, E.soft பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.53813
4. அளவெட்டி - உரும்பிராய், இந்து, 1999, உத்தரம், Chef School (George Brown College), canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 53256
5. சங்கானை- KKS, இந்து, 1999, அத்தம், Bsc, Accounting Economics, uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34476
6. சித்தங்கேணி, இந்து, 1999, கேட்டை, Msc, phd University of Queen mary, Uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.49678
7. நெடுந்தீவு, இந்து, 1996, அஸ்வினி, MBBS doctor, Uk citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.47836
8. திருநெல்வேலி, இந்து, 1998, உத்தராடம், MBBS, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 36481
9. கரவெட்டி, இந்து, 1995, அவிட்டம், LLB (university of australia), Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.34149
10. அச்சுவேலி, இந்து, 1998, சதயம், Bsc.eng hons in computer science and engineering (university of morotuwa) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 48542

(C-3489)

எம்மிடம் எல்லா நாட்டிலும் எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728


## தேசபந்து...

நீக்குவது தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அதனைப் பாராளுமன்றுக்கு சமர்ப்பித்த போதே, சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் குறிப்பிடுகையில், இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக பொலிஸ்மா அதிபர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியலமைப்பு செயற்பாடுகளில் இது ஒரு முக்கியமான தருணமாகும்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளி என்று விசாரணைக் குழு ஏகமனதாக முடிவு செய்து, அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்க பரிந்துரைத்துள்ளது. குறித்த அறிக்கையை அச்சிட்டு பாராளுமன்ற இணையத்தளத்தில் வெளியிடவும் மும்மொழிகளில் எம்.பி.க்களுக்கு வழங்கவும் கோரிக்கை விடுக்கிறேன் என்றார்.

பொலிஸ்மா அதிபராகவிருந்த தேசபந்து தென்னகோனிற்கெதிராக விசாரணை நடத்தக்கோரி 115 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டு சபாநாயகரிடம் சமர்பித்ததைத் தொடர்ந்து தேசபந்து தென்னகோனது தவறான நடத்தை மற்றும் கடுமையான அதிகார துஷ்பிரயோகம் குறித்து விசாரித்து அறிக்கை தயாரிக்க கடந்த ஏப்ரல் மாதம் விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. உயர் நீதிமன்ற நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேன குழுவின் தலைவராக பணியாற்றினார்.

நீதிபதி நீல் இத்தவெல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் லலித் ஏகநாயக்க ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்களாகப் பணியாற்றினர். இந்த விசாரணைக் குழு 10 தடவைகளுக்கு மேல் கூடி, விசாரணைகளை மேற்கொண்டு சாட்சியங்களைச் சேகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாத்தறை வெலிகமவில் உள்ள W15 ஹோட்டலில் T-56 துப்பாக்கியால் சுட்டு ஹோட்டலுக்கு தீங்கு விளைவிக்கும் குற்றவியல் நோக்கங்களை அடைய, பொலிஸ் துறையின் தலைவராக 8 பொலிஸ் அதிகாரிகளை சட்டவிரோதக் கூட்டத்தின் உறுப்பினர்களாகப் பயன்படுத்தி, தண்டனைச் சட்டத்தின் பிரிவு 147 இன் கீழ் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்தமை உள்ளிட்ட 9 முக்கிய குற்றச்சாட்டுகள் பொலிஸ்மா அதிபர் தென்னகோனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
26.07.2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat (SriLanka)
(AA1, AA2, AA3)
Qualification:- G.C.E O/L 6 Passes (Medium - Tamil & English)

✧ A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களில் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II
Qualification:- G.C.E A/L 3 Passes(Medium - Tamil & English)

Further Details:- Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382
(C-3486) 0774405917



## வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு (அருள் கல்வி வட்டம்) G.C.E.(O/L) க.பொ.த (சா/த) முற்றிலும் இலவசக் கருத்தரங்கு - 2025

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 06.08.2025 புதன் | ஊர்காவற்துறை பிரதேச செயலகம் | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 07.08.2025 வியாழன் | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரி | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 08.08.2025 வெள்ளி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்கள் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 08.00 - பி.ப 02.00 |
| 09.08.2025 சனி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண்கள் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 08.00 - பி.ப 02.00 |
| 10.08.2025 ஞாயிறு | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (கலவன் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 11.08.2025 திங்கள் | மன்னார் நகராட்சி சபை மண்டபம் (மன்னார் மற்றும் மடு மாணவர்கள்) | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 12.08.2025 செவ்வாய் | கிளிநொச்சி கூட்டுறவு சமுக மண்டபம் (கிளிநொச்சி தெற்கு மாணவர்கள்) | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 13.08.2025 புதன் | கிளிநொச்சி கூட்டுறவு சமுக மண்டபம் (கிளிநொச்சி வடக்கு மற்றும் துணுக்காய் மாணவர்கள்) | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 14.08.2025 வியாழன் | ஊற்றங்கரை பிள்ளையார் கோவில் மண்டபம் முல்லைத்தீவு | மு.ப 08.30 - பி.ப 02.00 |
| 15.08.2025 வெள்ளி | வவுனியா நகராட்சி சபை மண்டபம் | மு.ப 08.30 - பி.ப 02.00 |

- Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- G.C.E.(O/L) கடந்தகால வினாவிடைத்தொகுப்பு புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு : மாணவர்கள் பாடசாலை சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.

அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறவும்.

செயலமர்வின் அமைப்பாளர்கள்

1. திரு.வேலாயுதன் தேவசேனாதிபதி L.L.B(சிரேஷ்ட சட்டத்தரணி), தலைவர் - EDCC (தொ.பே : 0771133400)
2. திரு.கந்தசாமி சக்திதரன், பொது செயலாளர் EDCC, இலங்கை, தொ.பே 0770703360
3. Mr.Vijasundaram Ramnath, Coordinating Secretary of Hon.,MP.M.Jegatheeswaran
4. கிருஷ்ணபிள்ளை சிவானந்தன் B.A, செயலாளர், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தென்மராட்சி.
5. திரு.சூசை. ஜெபநேசன் தென்மராட்சி இணைப்பாளர். தொ.பே: 0771678150
6. திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம்) தொ.பே: 0773144527
7. திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) தேசிய லொத்தர் சபை தொ.பே: 0773850841
8. P.கமலதாசன் (அதிபர் – யாழ்.ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்) – தேசிய ரீதியான வளவாளர், தரப்படுத்தப்பட்ட அதிபர் சங்கம் இணைப்பாளர் யாழ்ப்பாணம். தொ.பே: 0771116739

(C-3482)

விளம்பர அனுசரணை : வலம்புரி
இணை அனுசரணை கல்விக் காருணியன் E.S.P நாகரட்ணம் ஐயா
(கஜமுகன் ஹாட்வெயர்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே :021 222 2833



## வேலையாட்கள் தேவை

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள சிவபூமி பூங்கன்றுகள் விற்பனை நிலையத்திற்கு முன் அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. (C-3480)

075 844 8787



## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurant இற்கு சமையல் அனுபவம் உள்ள வேலையாட்கள், உணவு பரிமாறுபவர்கள் (waiter) தேவை. (4856)

076 830 3931



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3485)



## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2200/- | Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2470/- | Australia 11Kg - 2130/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



## சிங்காரவேலன் சிவகாயத்ரி சுவர்க்கவாயில் சந்நிதானம்



ஆடி அமாவாசை தின
ருத்ர ஹோம வழிபாடும்
அன்னதானமும்

நேசம் நிறை நெஞ்சத்தீர்!
வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள சிங்கார வேலன் சிவகாயத்ரி சந்நிதானத்தில் ஆடி அமாவாசை தின ருத்ர ஹோம வழிபாடு நாளை(24.07.2025) வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

உற்சவ விபரம்
கும்ப பூஜை - அதிகாலை 5.30 திருவாசக முற்றோதல்
காலை 7.30 மூலஸ்தான பூஜை - காலை 11.00

தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னதானம் வழங்கப்படும்.
குறிப்பு - காலை முதல் மூதாதையர்களின் தர்ப்பண வழிபாடு இடம்பெறும்.

உபயம் :
திரு.திருமதி
பிரபாகரன் யாழினி
குடும்பம் (U.K)

இங்ஙனம்
கௌரவ கலாநிதி ராஜஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதம குருவும்
ஆதீன கர்த்தாவும் மேற்படி தேவஸ்தானங்கள்

"தெளிவே எம் சிந்தனை"
(C-3487)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org